# ராஜ்யம், உடன்படிக்கைகள் & பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு

**பாடம் 1**

## பழைய ஏற்பாட்டை ஏன் படிக்க வேண்டும்?

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

தூரம் ........ 2

காரணங்கள் ........ 3

இயற்கையான அகத்தூண்டுதல் ........ 3

தெய்வீக உறைவிடம் ........ 5

வகைகள் ........ 7

இறையியல் தூரம் ........ 8

கலாச்சார தூரம் ........ 9

தனிப்பட்ட தூரம் ........ 11

பொருத்தம் ........ 12

இயேசுவின் போதனைகள் ........ 13

எதிர்மறை கருத்துக்கள் ........ 13

நேர்மறையான உறுதிமொழிகள் ........ 20

பவுலின் போதனைகள் ........ 22

எதிர்மறை கருத்துக்கள் ........ 23

நேர்மறையான உறுதிமொழிகள் ........ 26

பிரயோகம் ........ 28

சவால்கள் ........ 29

பண்டைய உலகம் ........ 31

வரலாற்று வளர்ச்சி ........ 32

நம் உலகம் ........ 33

தொடர்புகள் ........ 34

அதே தேவன் ........ 35

அதே உலகம் ........ 40

அதே மக்கள் ........ 42

முன்னேற்றங்கள் ........ 46

சகாப்த முன்னேற்றங்கள் ........ 46

கலாச்சார முன்னேற்றம் ........ 49

தனிப்பட்ட முன்னேற்றங்கள் ........ 50

முடிவுரை ........ 51





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

பாரம்பரிய யூத அல்லது கிறிஸ்தவ பின்னணி இல்லாதவர்களிடம் ”ஏன் பழைய ஏற்பாட்டை படிக்க வேண்டும்?” என்று நாம் கேட்டால், ”பழைய ஏற்பாடு மிகவும் பழமையானது மற்றும் பொருத்தமற்றது, அது அதிகம் படிக்கத் தகுதியற்றது” என்று பெரும்பாலானவர்கள் இதுபோன்ற கருத்தை தெரிவிப்பார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக நாம் இருப்பதால, பழைய ஏற்பாட்டை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொள்ளுகிறோம். அது புனிதமான வேதம் ஆகும். ஆனால், “நாம் ஏன் பழைய ஏற்பாட்டைப் படிக்க வேண்டும்?” என்று கிறிஸ்தவர்களிடம் கேட்கும்போது அது ஆச்சரியமாகத் தோன்றலாம். நம்மில் சிலர், ”சரி, இன்றும் நமக்கு முக்கியமான சில விஷயங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பழைய ஏற்பாட்டில் உள்ளன” என்று கூறுவோம். ஆனால் பெரும்பாலும், தீவிரமான கிறிஸ்தவர்கள் கூட, ”பழைய ஏற்பாடு மிகவும் பழமையானது, அது அதிகம் படிக்கத் தகுதியற்றது” என்று கூறுகிறார்கள். இன்று கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஏன் பழைய ஏற்பாட்டைப் படிக்க வேண்டும்?

இந்தப் பாடம் ராஜ்யம், உடன்படிக்கைகள் மற்றும் பழைய ஏற்பாட்டின் நூற்தொகுப்பு என்கிற நம்முடைய தொடரின் முதலாவது வருவதாகும் – அதாவது தேவனுடைய ராஜ்யம் மற்றும் உடன்படிக்கைகளின் கருப்பொருள்கள் மற்றும் பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு புத்தகங்களில் இந்த கருப்பொருள்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை ஆராயும் ஒரு தொடர் ஆகும். ”பழைய ஏற்பாட்டை ஏன் படிக்க வேண்டும்?” கிறிஸ்துவின் நவீன சீஷர்கள் ஏன் வேதத்தின் இந்தப் பகுதியில் ஆர்வம் காட்ட வேண்டும்? இந்த பண்டைய வேத எழுத்துக்களைப் படிக்கும் பணியில் நாம் ஏன் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்? என்கிற முக்கியமான ஒரு அடிப்படை கேள்வியை இந்த முதல் பாடம் எதிர்கொள்ளுகிறது.

ஆரம்பத்திலிருந்தே, பழைய ஏற்பாட்டைப் படிப்பது உலகிலேயே எளிதான காரியம் அல்ல என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இது குறிப்பாக சவாலானது, ஏனென்றால் பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பு பல புத்தகங்களைக் கொண்டுள்ளது, வெவ்வேறு எழுத்தாளர்களால், வெவ்வேறு வரலாற்று சூழ்நிலைகளில், கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளில் எழுதப்பட்டது, அவர்கள் வெவ்வேறு வரலாற்று சூழ்நிலைகளில், கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளில் உரையாற்றினர். ஆனால், இந்தத் தொடரில் நாம் பார்ப்பது போல, ஒரு விஷயத்தை நாம் உணர்ந்து கொள்ளும்போது அதில் நாம் பெரும் முன்னேற்றம் அடைய முடியும்: இந்தப் புத்தகங்கள் அனைத்தும் பழைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அனைவரும் பொதுவாகக் கொண்டிருந்த அடிப்படை நம்பிக்கைகளின் அடிப்படையில் உள்ளன. தேவன் தனது உடன்படிக்கைகள் மூலம் நிறுவிய கொள்கைகளின் மூலம் இஸ்ரேலுடனான தனது உறவை நிர்வகித்தார் என்று அவர்கள் அனைவரும் நம்பினர். இதற்கு அப்பால், இந்த உடன்படிக்கைகள் வரலாற்றிற்கான தேவனுடைய மகத்தான இலக்கை நிறைவேற்ற வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் நம்பினர் - அதாவது சிருஷ்டிப்புகள் அனைத்தையும் தனது ராஜ்யமாக மாற்றுவதன் மூலம் தன்னை மகிமைப்படுத்துவதே அவரது இலக்காகும். பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், பழைய ஏற்பாட்டு நூற்தொகுப்பில் உள்ள புத்தகங்களில் குறிப்பிட்ட சூழ்நிலைகளை எடுத்துரைத்தபோது, தேவனுடைய ராஜ்யம் மற்றும் உடன்படிக்கைகளில் தங்களுடைய அடிப்படை நம்பிக்கைகளை வரைந்தனர்.

”ஏன் பழைய ஏற்பாட்டை படிக்க வேண்டும்?” என்கிற கேள்வியைக் கேட்கும்போது, நாம் மூன்று முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்துவோம். முதலில், பழைய ஏற்பாட்டிற்கும் நமக்கும் இருக்கும் தூரத்தின் காரணமாக, படிப்பதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்வோம். இரண்டாவதாக, பழைய ஏற்பாட்டு வேதாகமம் நம்முடைய இன்றைய வாழ்வோடு பொருந்துவதின் காரணமாக கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று பார்ப்போம். மூன்றாவதாக, பழைய ஏற்பாட்டின் பாடங்களை நம் வாழ்வில் பயன்படுத்துவதற்கு நாம் அதை படிக்க வேண்டும் என்பதை ஆராய்வோம். பழைய ஏற்பாட்டின் வேதாகமம் பெரும்பாலும் நம்மிடமிருந்து வெகு தொலைவில் இருப்பதாகத் தோன்றுகிற யதார்த்த உண்மையுடன் நாம் ஆரம்பிக்கலாம்.

# தூரம்

வேதாகம மாணவர்கள் பழைய ஏற்பாட்டைப் படிக்கத் தொடங்கும் போது பெரும்பாலும் இதேபோன்ற, கிட்டத்தட்ட யூகிக்கக்கூடிய செயல்முறையை மேற்கொள்கின்றனர். பழைய ஏற்பாடு தேவனின் தவறாத மற்றும் ஆவியானவரால் ஏவப்பட்ட வார்த்தை என்று நமக்கு சரியாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது, எனவே இந்த வேதாகமத்தில் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எளிதில் பயன்படக்ூடிய போதனைகள் இருக்க வேண்டும் என்று நம்மில் பலர் கருதுகிறோம். இப்போது, நாம் மிகவும் தேர்ந்தெடுத்து படித்தால், தேவனுடைய பண்புகளைப் பற்றி மட்டுமோ, அல்லது “திருடாதே” அல்லது “கொலை செய்யாதே” போன்ற தேவனின் கட்டளைகளைப் பற்றி மட்டுமோ தான் பேசுவோம். ஆனால் நாம் பழைய ஏற்பாட்டை மிகவும் கவனமாக படிக்கும் போது ஒன்று நடக்கிறது. நாம் இன்னும் விரிவாக ஆராயும்போது, பழைய ஏற்பாட்டின் பல பகுதிகள் அறிமுகமில்லாத கண்ணோட்டங்களை முன்வைப்பதைக்

காண்கிறோம். உண்மையில், நாம் அதை எவ்வளவு அதிகமாகப் படிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் ஒரு பழங்கால, தொலைதூர உலகத்தை ஆராய்வது போல் உணர்கிறோம்.

நமமிலிருந்து பழைய ஏற்பாட்டிற்கான தூரத்தை இரண்டு வழிகளில் பார்க்கலாம். முதலில், இந்த தூரத்திற்கான காரணங்களை நாம் பார்ப்ோம் - அதாவது இந்த வேதவசனங்கள் ஏன் நமக்கு அந்நியமாகத் தோன்றுகின்றன? என்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, நாம் சந்திக்கும் தூரத்தின் வகைகளை ஆராய்வோம். பழைய ஏற்பாட்டில் உள்ள எந்த மாதிரியான கண்ணோட்டங்கள், நவீன கிறிஸ்தவர்களாக நாம் நம்புவதில் இருந்து மிகவும் வித்தியாசமாகத் தோன்றுகின்றன? நமக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே உள்ள தூரத்திற்கான சில முக்கிய காரணங்களை முதலில் பார்க்கலாம்.

## காரணங்கள்

குறைந்த பட்சம் இரண்டு காரணிகளாவது பழைய ஏற்பாட்டில் இருந்து நாம் தொலைவில் இருப்பதை உணர வைக்கின்றன. ஒருபுறம், இயற்கையான அகத்தூண்டுதல் எனப்படும் ஒரு செயல்முறையின் மூலம் தேவன் இந்த வேதங்களை மனிதகுலத்திற்கு வழங்கினார். மறுபுறம், தெய்வீக உறைவிடம் எனப்படும் ஒரு செயல்முறையின் மூலம் அதன் நோக்கத்தை நிறைவேற்ற தேவன் பழைய ஏற்பாட்டை வடிவமைத்தார். வேதத்தின் இந்தப் பகுதியைப் படிக்கும்போது நாம் எதிர்கொள்ளும் பல சவால்களை பழைய ஏற்பாட்டின் இந்தப் பண்புகள் விளக்குகின்றன. இயற்கையான அகத்தூண்டுதலின் செயல்முறையை முதலில் கவனியுங்கள்.

### இயற்கையான அகத்தூண்டுதல்

வேதம் தெய்வீக அகத்தூண்டுதலின் மூலம் நம்மிடம் வந்த வரலாற்று சுவிசேஷ பார்வையை "இயற்கையான அகத்தூண்டுதல்" என்று விவரிப்பது பொதுவானதாகும். பரிசுத்த ஆவியானவர் வேதவசனங்களைத் ஏவுதல் மூலமாக அருளினார் என்பதை நாம் உறுதிப்படுத்தும் அதே வேளையில், அது மனித எழுத்தாளர்களின் ஆளுமைகள், அனுபவங்கள் மற்றும் நோக்கங்களிலிருந்து தனியாக பிரிக்கப்படவில்லை என்பதைக் குறிக்க இந்தச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். அதாவது, பரிசுத்த ஆவியின் விசேஷித்த, தவறாத மேற்பார்வையின் கீழ், மனித எழுத்தாளர்கள் தாங்களே எதை எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்தனர். வேதாகமம் "இயந்திர" ஏவுதலின் விளைவாக தோன்றவில்லை, அதாவது தேவன் மனித எழுத்தாளர்களை செயலற்ற வழித்தடங்களாகப் பயன்படுத்தினார் என்பது சரியல்ல. வேதாகமம் மானிடர்களின் கற்பனைத் திறனில் உதித்தது என்றும் சொல்ல முடியாது. ஒரு இசைக்கலைஞனோ அல்லது ஓவியனோ உந்துதல் பெறுவதைப் போல வேதாகம ஆசிரியர்களுக்கு தேவன் எழுதுவதற்கான ஒரு ஊக்கத்தைக்

கொடுத்தார் என்பது இதன் பொருளல்ல. மாறாக, தேவன் வேதத்தின் உள்ளடக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானித்தார், அதனால் அது பிழையின்றியும், தேவனுடைய வார்த்தையாகவும் இருந்தது. ஆனால் அவர் மனித எழுத்தாளர்களின் தனிப்பட்ட ஆளுமைகள், அனுபவங்கள் மற்றும் நோக்கங்களைப் பயன்படுத்தினார், இதனால் வேதத்தை பரிசுத்த மனிதர்களின் வார்த்தைகள் என்றும் நாம் சரியாகப் பேசலாம்.

2 பேதுரு 3:15-16 இல் பவுலின் நிருபங்களைப் பற்றி பேதுரு பேசிய விதத்தைக் கவனியுங்கள். அங்கே இந்த வார்த்தைகளை நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> நம்முடைய கர்த்தரின் நீடியபொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான். அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் (2 பேதுரு 3:15-16).

இந்த வசனங்களில், பவுலின் நிருபங்கள் தேவனால் பவுலுக்குக் கொடுக்கப்பட்ட ஞானத்தால் எழுதப்பட்டவை என்பதை அப்போஸ்தலனாகிய பேதுரு உறுதிப்படுத்தினார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பவுலின் நிருபங்கள் தேவ ஆவியினால் அருளப்பட்டது, எனவே அவை வெறும் மனித எழுத்துக்கள் அல்ல, தேவனுடைய எழுத்துக்களாகவும் இருக்கின்றன. ஆனாலும், பவுலின் ஆளுமை இந்த நிருபங்கள் மூலம் வந்தது என்பதை பேதுருவும் உறுதிப்படுத்தினார். அவர் அதை எப்படி எழுதியிருக்கிறார் என்பதைக் கவனிங்கள்: "பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்." இந்த வேத எழுத்துக்கள் பவுலின் நிருபங்களாகவே இருந்தன. அப்படியானால், பேதுருவின் பார்வையில், அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபங்கள் தேவனையும் அவருடைய மனித எழுத்தாளரையும் உள்ளடக்கிய ஒரு செயல்முறையின் விளைவாக வந்தன என்பதை நாம் பார்க்கலாம்.

இதே கண்ணோட்டம் பழைய ஏற்பாட்டிற்கும் பொருந்தும். அதனால்தான் பழைய ஏற்பாட்டு பிரமாணம் தேவனுடைய பிரமாணம் என்று மட்டுமல்ல, மோசேயின் பிரமாணம் என்றும் அழைக்கப்படுகிறது. இது தேவனிடமிருந்தும் மோசேயிடமிருந்தும் வந்தது. அதனால்தான் பல சங்கீதங்கள் தாவீதின் சங்கீதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஏசாயா, எரேமியா மற்றும் தானியேல் போன்ற மனித எழுத்தாளர்களைப் பற்றி வேதாகம எழுத்தாளர்கள் ஏன் பேசினார்கள் என்பதையும் இயற்கையான அகததூண்டுதல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விளக்குகிறது. பழைய ஏற்பாட்டின் உயர் எழுத்தாளராக தேவன் இருந்தபோதிலும், அவர்கள் யார், எங்கு, எப்போது வாழ்ந்தார்கள் என்பதைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் புத்தகங்களை எழுத அவர் பரிசுத்த தீர்க்கதரிசிகளைப் பயன்படுத்தினார்.

இதைப் பற்றி நீங்கள் சிந்திக்கும்போது, வேதாகமத்தின் இயற்கையான அகத்தூண்டுதல் பழைய ஏற்பாட்டிலிருந்து நம்மை ஏன் தூரப்படுத்துகிறது என்பதைப் பார்ப்பது கடினம் அல்ல. பழைய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் அனைவரும் பண்டைய மக்கள் ஆவர். அவர்கள் பண்டைய கிழக்கு பகுதியில் வாழ்ந்தனர், பல விஷயங்களை, அவர்கள் அந்த நாட்களில் இருந்த மக்களைப் போலவே சிந்தித்து எழுதினார்கள். பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்துவின் வருகைக்கு முன்பே எழுதினர். நம்மிடம் உள்ளதைப் போன்று முழுமையாக வளர்ச்சியடைந்த புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ இறையியல் அவர்களிடம் இருக்கவில்லை. இதன் விளைவாக, நீங்களும் நானும் பழைய ஏற்பாட்டைப் படிக்கும்போது, பழைய ஏற்பாட்டின் உலகம் நமது நவீன உலகத்திலிருந்து மிகவும் வேறுபட்டது என்பதை விரைவில் காணத் தொடங்குகிறோம்.

> பழைய ஏற்பாட்டு யூதர்கள் 600-க்கும் மேற்பட்ட லேவிய சட்டங்களின்படி வாழ்ந்தனர், அந்த சட்டங்கள் அவர்களின் வாழ்க்கையின் ஒழுக்கம், பொது வாழ்வு, ஆவிக்குரிய வாழ்வு, ஆண்கள் மற்றும் பெண்களின் உறவுகள், விலங்குகள், விவசாயம், விருந்து ஆகியவற்றை நிர்வகிக்கும் ஒவ்வொரு அம்சத்தையும் நிர்வகிக்கிறது. எனவே, அந்த பிரச்சனைகள் அனைத்தும் நம் விளக்கம் மற்றும் புரிதலுக்கு முக்கியமானவை. மறுபடியுமாக, 21 ஆம் நூற்றாண்டு உலகத்தை முதல் நூற்றாண்டிற்குள் அல்லது கி.மு. உலகத்திற்குள் திணிப்பது நோக்கமல்ல.
>
> — Dr. தாடியஸ் ஜே.ஜேம்ஸ், Jr.

வேதாகம எழுத்தாளர்களின் இயற்கையான அகத்தூண்டுதலால் உருவாக்கப்பட்ட சவால்களுக்கு மேலதிகமாக, பழைய ஏற்பாட்டில் இருந்து தூரமாகவிருக்கும் உணர்வின் மற்றொரு காரணம் தெய்வீக உறைவிடம் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும்.

## தெய்வீக உறைவிடம்

பரவலாகப் பேசினால், ”உறைவிடம்” என்பது, தேவன் மனிதகுலத்திற்கு தன்னை வெளிப்படுத்தும் ஒவ்வொரு முறையும், அவர் நம்மிடம் வரையறுக்கப்பட்ட மனித சொற்களில் பேசுகிறார் என்னும் உண்மையை விவரிக்க இறையியலாளர்கள் பயன்படுத்தும் ஒரு பதம் ஆகும். தேவன் நமக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்பாற்பட்டவரும் புரிந்துகொள்ள முடியாதவருமாய் இருப்பதால், அவர் தன்னை வெளிப்படுத்தும் போதெல்லாம், வரையறுக்கப்பட்ட மனிதர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வழிகளில் அவர் நமக்கு இணங்குகிறார். இல்லையெனில், அவரைப் புரிந்து கொள்ளவே முடியாது. ஏசாயா 55:8-9 இல் நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கும்போது நீங்கள் நினைவுகூறுவீர்கள்:

> என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது (ஏசாயா 55:8-9).

தேவனுடைய எண்ணங்களும் வழிகளும் மிகவும் அதீதமானவை - அவை நம் வரம்புகளை எல்லையற்ற வகையில் மீறுகின்றன - இதுவரையிலான அவருடைய ஒவ்வொரு வெளிப்பாடும் மனித புரிதல்களுக்கு ஏற்பவே வெளிப்படுத்தப்பட்டது. அவர் வெளிப்படுத்தியதை நம்மில் சிலராவது புரிந்துகொண்டு பின்பற்ற வேண்டும் என்பதற்காக இதைச் செய்தார்.

பழைய ஏற்பாட்டில் தேவன் ஒரு பரந்த, பொது அர்த்தத்தில் மனிதகுலத்தின் வரம்புகளுக்குள் தன்னை அனுமதிக்கவில்லை என்பதை உணர வேண்டியது அவசியம். மாறாக, பண்டைய கிழக்கில் வாழ்ந்த இஸ்ரவேலின் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கு அவர் தன்னைத் தானே மாற்றிக்கொண்டார். அவர் பழைய ஏற்பாட்டு வேதாகமத்தை முதலில் பண்டைய இஸ்ரவேலர்கள் புரிந்து கொள்ளும் வகையில் வடிவமைத்தார்.

பழைய ஏற்பாட்டின் முதன்மை வாசகர்கள் பண்டைய யூதர்கள் என்பதால், தேவன் பழைய ஏற்பாட்டை எபிரெய மற்றும் அராமிய மொழிகளில் எழுதினார். ராஜ பிரமாணங்கள் உட்பட முக்கியமான தேசிய ஆவணங்கள் கற்களில் எழுதப்படுவது சர்வதேச வழக்கம் என்பதால் தேவன் கற்களில் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். மேலும், பல விதங்களில் பழைய ஏற்பாட்டு கதை, கவிதை, ஞான இலக்கியம் மற்றும் நியாயப்பிரமாணம் ஆகியவற்றின் இலக்கிய பாணிகள் பண்டைய கிழக்கில் இருந்த பொதுவான பல இலக்கிய மரபுகளைப் பின்பற்றின. இப்படி பல வழிகளில், தேவன் பழைய ஏற்பாட்டை தம்முடைய பழங்கால மக்கள் புரிந்து கொள்ளும்படி அவர்களுக்கு அளித்தார்.

இந்த காரணத்திற்காக, நவீன மனிதர்களான நீங்களும் நானும் பழைய ஏற்பாட்டை படிக்கும்போது, நீண்ட காலத்திற்கு முன்பு வாழ்ந்த மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் வழங்கப்பட்டது என்ற உண்மையை நாம் தொடர்ந்து சந்திக்கிறோம். இது குறிப்பாக பண்டைய இஸ்ரவேல் மக்களுடன் உரையாற்றும் வகையில் எழுதப்பட்டது.

> வேதத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகமும் அசல் வாசகர்களுக்காக எழுதப்பட்டது, 21 ஆம் நூற்றாண்டில் வாழும் நாம் அசல் வாசகர்கள் அல்ல. புதிய ஏற்பாட்டில் உள்ள பெரும்பாலான தனிப்பட்ட புத்தகங்கள் நிருபங்கள் அல்லது கடிதங்கள் என்பதை உணர்ந்துகொள்வது சுவாரஸ்யமானதாகவும் உதவியாகவும் இருக்கும் என்று நான் நினைக்கிறேன், எனவே நாம் அந்த நிருபங்களைப் படிக்கும்போது - நீங்கள் அதை முழு வேதாகமமாக விரிவுபடுத்தலாம் என்று நினைக்கிறேன் … மற்றவர்களின் கடிதத்தை நாம் வாசிக்கிறோம். நாங்கள் சபையயைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவை நமக்கானவை, ஆனால் அவை முதலில் அசல் வாசகர்களுக்கு எழுதப்பட்டன.
>
> – Dr. ராபர்ட் மக்எவன்

பழைய ஏற்பாடு நம்மில் இருந்து தூரமாக இருப்பதற்கான சில காரணங்களை இப்போது நாம் பார்த்தோம். ”நமக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையில் நாம் அடிக்கடி காணும் தூரத்தின் வகைகள், பழைய ஏற்பாட்டில் நமக்கு அந்நியமாகத் தோன்றும் எவ்வகையான விஷயங்களை நாம் சந்திக்கிறோம்?” என்ற நமது இரண்டாவது விஷயத்திற்கு நேராக திரும்ப வேண்டும்.

## வகைகள்

பழைய ஏற்பாடு பெரும்பாலும் நவீன மக்களாகிய நமக்கு தூரமாக உள்ளது என்பதை ஒப்புக்கொள்வது நல்லது. ஆனால் இந்த உண்மை குழப்பத்திற்கும் வழிவகுக்கும், மேலும் இது நம்மை வேதத்தின் இந்த பகுதியை படிக்க விடாமல் செய்யும். பழைய ஏற்பாட்டின் மீது ஆர்வம் குறைவதை தவிர்ப்பதற்கான ஒரு பயனுள்ள வழி, பழைய ஏற்பாட்டில் உள்ள அந்த வகையான சிக்கலான விஷயங்களைக் கண்டறிவதாகும். நாம் அடிக்கடி காணும் பழைய ஏற்பாட்டுக்கும் நமக்கும் உள்ள தூரத்தின் வகைகளை நாம் அறிந்தால், இந்த வேதவசனங்களை நம் வாழ்வில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் நாம் சிறப்பாக தயாராகிவிடுவோம்.

நமக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே உள்ள முக்கிய வகையான தூரத்தை பட்டியலிட பல வழிகள் உள்ளன, ஆனால் நம் நோக்கங்களுக்காக, நாம் மூன்றைப் பற்றி மட்டும் பேசுவோம்: முதலில், இறையியல் தூரம்; இரண்டாவது, கலாச்சார தூரம்; மூன்றாவது, தனிப்பட்ட தூரம். இந்த மூன்று வகையான தூரங்களும் பல வழிகளில் ஒன்றோடொன்று இணைக்கப்படுகின்றன. ஆனால் விவாதத்திற்காக, பழைய ஏற்பாட்டைப்

படிக்கும்போது நம்மை எதிர்கொள்ளும் இறையியல் தூரத்தில் தொடங்கி, அவற்றை ஒவ்வொன்றாகக் கையாள்வோம்.

## இறையியல் தூரம்

நாம் இறையியல் தூரத்தைப் பற்றி பேசும்போது, பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பெற்ற வெளிப்பாட்டிற்கும் கிறிஸ்துவில் நாம் பெற்ற முழுமையான வெளிப்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி முதன்மையாக சிந்திக்கிறோம். பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டின் போதனைகளுடன் ஒத்துப்போகாத இறையியல் கண்ணோட்டங்களை முன்வைக்கிறதாகத் தோன்றுகிறது என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவரும் உணர்ந்துகொள்கிறார்கள். சில உதாரணங்களை கவனிக்கலாம்.

ஆதியாகமம் 22 இல், தேவன் ஆபிரகாமை தனது குமாரனைப் பலியிட அழைத்தார், அதற்கு கீழ்படிய அவர் தயாராக இருந்ததற்காக தேவன் அவரை ஆசீர்வதித்தார். ஆனால், தன் குமாரனைப் பலியிட தேவன் அழைத்தார் என்று இன்று நம்பும் ஒருவரைப் பற்றி நாம் என்ன நினைப்போம்? அத்தகைய இறையியல் கூற்றை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டோம்.

மோசேயின் நாட்களில், தம்முடைய உண்மையுள்ள ஜனங்கள் எகிப்திலிருந்து வாக்குத்தாத்த தேசத்திற்கு ஒரு பெரிய படையாக அணிவகுத்துச் செல்வார்கள் என்று தேவன் எதிர்பார்த்தார். ஆனால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடைவதற்காக சீனாய் வனாந்தரத்தின் வழியாக ஒரு கிறிஸ்தவர்களின் கூட்டம் உண்மையில் அணிவகுத்துச் செல்வதைக் கண்டால், நாம் நிச்சயமாக அதை விசித்திரமாக நினைப்போம்.

பழைய ஏற்பாட்டில், தங்கள் தலைமுடியை வெட்டக்கூடாது என்று நசரேய சபதம் செய்து, தேவனுடைய சேவையில் தங்களை அர்ப்பணித்த மனிதர்களைப் பற்றி வாசிக்கிறோம். அல்லது தேவன் எருசலேமில் உள்ள ஆலயத்தை தம்முடைய மக்கள் வழிபடும் *ஒரே* இடமாக நியமித்தார் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். பாவங்களுக்குப் பரிகாரமாக மிருகங்களைப் பலியிடும்படி தேவன் தம்முடைய ஜனங்களைக் கட்டளையிட்டார் என்றும், பெண்கள், குழந்தைகள் உட்பட கானானிய நகரங்களை மொத்தமாக அழிக்கும்படி கட்டளையிட்டார் என்றும் வாசிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் தேவன் வெளிப்படுத்தியவற்றிலிருந்து வேறுபட்டதாகத் தோன்றும்போது, இதுபோன்ற விஷயங்களை தேவன் வெளிப்படுத்தினார் என்று நம்புவதற்கு பழைய ஏற்பாடு நம்மை அழைக்கிறது என்பதில் நாம் அனைவரும் கொஞ்சம் குழப்பமடையவில்லையா? இவ்வகையான இறையியல் வேறுபாடுகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. நாம் வேறு என்ன சொன்னாலும், நமக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே நிச்சயமாக பெரிய இறையியல் தூரம் உள்ளது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தேவன் நமக்குத் தன்னை வெளிப்படுத்துவது போல், அவர் இடத்திலும் நேரத்திலும் தன்னை வெளிப்படுத்துகிறார்... பழைய உடன்படிக்கையின் நடைமுறையைப் பற்றி நீங்கள் உடன்படிக்கையின் பழக்கத்தில் இருந்த, நடைமுறைப்படுத்தப்பட்ட சில உணவு பிரமாணங்கள் மற்றும் சில சுத்தமான/அசுத்தமான சடங்குகள் பற்றி நீங்கள் நினைத்துப்பாருங்கள். இது பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலர்களால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், இருப்பினும், உடன்படிக்கை மாற்றங்களின் அடிப்படையில் இன்று நாம் அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதுபோன்ற விஷயங்களை ஒருவர் செய்யலாம், ஆனால் அது தேவையில்லை. இது உடன்படிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. உண்மையில், நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும், ஏனென்றால் பழைய ஏற்பாடு இவற்றைச் செய்ய சொல்கிறது என்று நீங்கள் மக்களுக்கு சொல்லும் போது, "தேவனுடன் சரியான உறவைப் பெறுவதற்கு நாம் நிறைவேற்றப்பட்ட பழைய உடன்படிக்கையின் கீழ் வர வேண்டும்" என்று சொல்வீர்கள். எனவே, உடன்படிக்கை மாற்றங்கள் காரணமாக அந்த வகையான நடைமுறைகளில் சில அவசியமில்லை.
>
> – Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

இதனுடன் சேர்த்து, பழைய ஏற்பாட்டிலிருந்து நம்மைப் பிரிக்கும் மற்றொரு வகையான தூரம் பண்டைய கிழக்கு மற்றும் நமது நவீன உலகத்திற்கு இடையிலான கலாச்சார தூரமாகும்.

## கலாச்சார தூரம்

மனித கலாச்சாரங்கள் தொடர்ந்து மாறி வருவதால் நமக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே கலாச்சார இடைவெளி உள்ளது. சமூக கட்டமைப்புகள் மாறுகின்றன. பழைய பழக்கவழக்கங்கள் விசித்திரமாகவும் மற்றும் காலாவதியானதாகவும் தெரிகின்றன. 200 ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் சொந்த நாட்டிற்குச் சென்றதை கற்பனை செய்து பாருங்கள். நாம் சற்று வித்தியாசமான சகாப்தத்தில் இருந்தாலும், பல வேறுபாடுகள் நாம் வேறு உலகில் இருப்பதைப் போல உணரவைக்கும். இப்போது, 200 ஆண்டுகளுக்கு முன்பு இதே இடத்தில் இது உண்மையாக இருந்தால், நமக்கும் பழைய ஏற்பாட்டில் நாம் படித்ததற்கும் இடையே கலாச்சார வேறுபாடுகள் எவ்வளவு அதிகமாக இருக்க வேண்டும்? பண்டைய கிழக்கிற்கும் நமது நவீன

உலகத்திற்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன, பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும் பல விஷயங்கள் வியக்கத்தக்க வகையில் அறிமுகமில்லாதவைகளாக இருக்கின்றன.

இஸ்ரவேல், கானான், எகிப்து, அசீரியா, பாபிலோன், பாரசீகம் அல்லது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பல கலாச்சாரங்கள் என பண்டைய உலகில் பல்வேறு இடங்களில் உள்ள வாழ்க்கையை பழைய ஏற்பாடு விவரிக்கும் போது நாம் கலாச்சார தூரத்தை உணர்கிறோம். நாம் சந்திக்கும் கதாபாத்திரங்கள் இன்று போலவே எண்ணற்ற கலாச்சார நம்பிக்கைகள், மதிப்புகள் மற்றும் நடைமுறைகளைக் கொண்டிருந்தன. ஆனால் அவை பெரும்பாலும் நமது நவீன கலாச்சார நம்பிக்கைகள், மதிப்புகள் மற்றும் நடைமுறைகளிலிருந்து மிகவும் வேறுபட்டவை. பழைய ஏற்பாட்டில் காணப்படும் மனித கலாச்சாரத்தின் சில உதாரணங்களைக் கவனியுங்கள்:

பழைய ஏற்பாட்டின் பெரும்பகுதி விவசாய உலகத்தை விவரிக்கிறது. வேதாகமத்தின் பக்கங்களில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பற்றி நாம் படிக்கிறோம், ஆனால் பல நவீன நகர்ப்புற மக்களால் இந்த பண்டைய வாழ்க்கைமுறையில் என்ன நடந்தது என்பதை கற்பனை செய்து பார்க்க முடியாது. பழைய ஏற்பாட்டின் நாட்களில் தொழில்நுட்பங்களும் மிகவும் வித்தியாசமாக இருந்தன. இன்று நம்மில் பலர் தொடர்புகொள்வதற்கும், வேலை செய்வதற்கும், செயல்படுவதற்கும் நம்பியிருக்கும் தொழில்நுட்பங்கள் பண்டைய காலத்தில் இருக்கவில்லை.

பழைய ஏற்பாட்டில், நிச்சயிக்கப்பட்ட திருமணங்களைப் பற்றி வாசிக்கிறோம். வேதத்தின் முக்கியமான நபர்கள் பலதார மணத்தை கடைப்பிடித்ததையும் அறிகிறோம். பழைய ஏற்பாட்டில் அடிமைத்தனத்தின் பல்வேறு வடிவங்கள் காணப்படுகின்றன. இஸ்ரவேலுக்குள்ளும், இஸ்ரவேலுக்கு வெளியேயும், கலாச்சாரங்கள் ஏகாதிபத்தியத்தின் அரசியல்களால் ஆழமாகப் பாதிக்கப்பட்டன. ஒரு சில விதிவிலக்குகளும் இருந்தன, குறிப்பாக பாலைவன பழங்குடியினரிடையே இருந்தன. ஆனால் மகா ராஜாக்கள் அல்லது பேரரசர்கள் மற்றும் அவர்களின் சக்திவாய்ந்த படைகள் இந்த வேத பகுதிகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன. பழைய ஏற்பாட்டின் கதாபாத்திரங்கள் நவீன ஜனநாயக கொள்கைகளைப் பற்றி நடைமுறையில் எதுவும் அறிந்திருக்கவில்லை.

பழைய ஏற்பாட்டு வாழ்க்கையின் இதே போன்ற அம்சங்களை நாம் பார்க்கும்போது, அவற்றை எவ்வாறு கையாள்வது என்று நாம் அடிக்கடி யோசித்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய கலாச்சாரத்திலிருந்து மிகவும் வேறுபட்ட கலாச்சாரங்களில் ஆழமாகப் பதிந்திருக்கும் வேதத்தை நாம் என்ன செய்வது? கலாச்சார வேறுபாடுகள் நமக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே ஒரு பெரிய இடைவெளியை உணர வைக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உதாரணமாக, பழைய ஏற்பாட்டை நீங்கள் திரும்பிப் பார்த்தால், இன்றைய அமைப்பிலிருந்து வேறுபட்ட விஷயங்கள் இருப்பதை நீங்கள் காண்பீர்கள் என்று நினைக்கிறேன். ஒன்று, பழைய ஏற்பாடு அதன் அமைப்பு மற்றும் நடைமுறைகளில் மிகவும் விவசாயம் கலந்ததாக இருந்தது… இரண்டாவதாக, உதாரணமாக, பலதார மணம் என்பது மிகவும் பொதுவானது… அதனால் அது கலாச்சார ரீதியாக நம்மிடமிருந்து வெகு தொலைவில் உள்ளது.
>
> – Dr. லூயிஸ் ஆர்டெசா

பழைய ஏற்பாட்டில் உள்ள இறையியல் மற்றும் கலாச்சாரம் எவ்வாறு நமக்கு அடிக்கடி விசித்திரமாகத் தோன்றுகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, மூன்றாவது வகையான தூரத்தைப் பார்க்க வேண்டும் - அதை நாம் ”தனிப்பட்ட” தூரம் என்று அழைக்கலாம்.

## தனிப்பட்ட தூரம்

”தனிப்பட்ட” தூரத்தைப் பற்றி நாம் பேசும்போது, பழைய ஏற்பாட்டின் நாட்களில் வாழ்ந்த மக்கள் நவீன மக்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்ற உண்மையைக் குறிப்பிடுகிறோம். நமக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள பல இடைவெளிகள் பெரும்பாலும் தனிப்பட்ட, மனித காரணிகளை உள்ளடக்கியது. நிச்சயமாக, பழைய ஏற்பாட்டின் மக்கள் நம்மிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் அல்ல. அவர்கள் பல முக்கியமான வழிகளில் நம்மைப் போலவே இருந்தன என்பதை இந்த பாடத்தில் நாம் பின்னர் பார்க்கப் போகிறோம். ஆனால் அதே நேரத்தில், அவர்கள் வித்தியாசமான தனிப்பட்ட அனுபவங்களைக் கொண்டிருந்தனர், அது இன்று நாம் இருக்கும் நிலையில் இருந்து அவர்களை மிகவும் வித்தியாசப்படுத்தியது.

பழைய ஏற்பாட்டு காலத்தில் இருந்தவர்கள் நம் காலத்தில் இருப்பவர்களிடமிருந்து வேறுபட்டிருப்பதில் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களின் பல மனோபாவங்களும் செயல்பாடுகளும் அவர்கள் வாழ்ந்த இறையியல் மற்றும் கலாச்சார உலகில் இருந்து வளர்ந்தன. இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள்: இறையியல் மட்டத்தில், பழைய ஏற்பாட்டில் உள்ள பல நபர்கள் இன்று நம்மைப் போலல்லாமல் குறிப்பிடத்தக்க ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றிருந்தனர். அவர்கள் பரலோகத்திலிருந்து தரிசனங்களைப் பெற்று தேவனுடைய சத்தத்தைக் கேட்டார்கள். அவர்கள் பரலோகத்திலுள்ளவர்களுடன் தொடர்பு கொண்டனர். ஒரு கணம் நின்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள், இதுபோன்ற ஆவிக்குரிய அனுபவங்கள் உங்களுக்கு இருந்தால் உங்களுக்கு அது எப்படி இருக்கும்?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தெய்வீக தரிசனங்கள்,தேவ தூதர்கள் மற்றும் பிசாசுகள் போன்றவைகளின் அனுபவங்களை பெற்றிருந்தால் நீங்கள் எப்படிப்பட்ட மனிதர்களாய் இருப்பீர்கள்? சந்தேகமில்லாமல், இத்தகைய அனுபவங்கள் நம்மை வியத்தகு முறையில் மாற்றும். இந்த உண்மையை உணர்ந்துகொள்வது, நாம் பழைய ஏற்பாட்டின் மக்களிடமிருந்து பல குறிப்பிடத்தக்க வழிகளில் வேறுபட்டவர்கள் என்பதை அடையாளம் காண உதவுகிறது.

இதை விட, கலாச்சார தாக்கங்கள் காரணமாக நாம் பழைய ஏற்பாட்டு மக்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறோம் என்பதைக் கவனியுங்கள். பழைய ஏற்பாட்டில், மக்கள் பெரும்பாலும் நமக்கு அந்நியமான கலாச்சார பாத்திரங்களை கொண்டிருந்தனர். அவர்கள் ராஜாக்கள், ராணிகள், வேலைக்காரர்கள் மற்றும் அடிமைகளாய் இருந்தனர். ஆண்களும் பெண்களும் தங்கள் பாத்திரங்களை இன்று நாம் நம்முடைய பாத்திரத்தைப் பார்ப்பதை விட வித்தியாசமாகப் பார்த்தார்கள். பழைய ஏற்பாட்டு மக்களின் ஆளுமைகள் பண்டைய போரின் கொடூரங்களால் ஆழமாக பாதிக்கப்பட்டன. நவீன தொழில்நுட்பத்தின் உதவியின்றி பஞ்சங்கள் மற்றும் வறட்சிகளை கடந்து செல்வது பண்டைய மக்களின் உடல் மற்றும் உணர்ச்சி ஆரோக்கியத்தை பாதித்தது. இன்று நம்மில் பலர் இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொண்டதில்லை. இதன் விளைவாக, பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள நபர்களை நாம் அடிக்கடி அடையாளம் காண கடினமாக உள்ளது.

பழைய ஏற்பாட்டை நம்மிடமிருந்து பிரிக்கும் காரணங்களையும் தூரத்தையும் இப்போது நாம் பார்த்தோம், நவீன மக்களுடனான பழைய ஏற்பாட்டின் பொருத்தம் என்ற நமது இரண்டாவது தலைப்புக்கு நாம் திரும்ப வேண்டும். பழைய ஏற்பாடு மிக நீண்ட காலத்திற்கு முன்பு எழுதப்பட்டிருந்தால், அது இன்றும் நமக்குப் பொருத்தமானது என்று நாம் ஏன் எதிர்பார்க்க வேண்டும்?

# பொருத்தம்

கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு பழைய ஏற்பாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று எண்ணுவதற்கு எண்ணற்ற காரணங்கள் உள்ளன. ஆனால் மிக முக்கியமான ஆதாரம் இயேசுவிடமிருந்தும் அவருடைய முதல் நூற்றாண்டு அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளிடமிருந்தும் வருகிறது. பழங்கால இஸ்ரவேலருக்குப் பழைய ஏற்பாடு என்பது வெறுமனே தேவனுடைய அதிகாரபூர்வமான வார்த்தைமட்டுமல்ல, ஆனால் அது அவர்களுடைய காலத்திலும் கிறிஸ்தவர்களுக்கான தேவனுடைய வார்த்தை என்று இந்த மனிதர்கள்

நம்பிக்கையுடன் கற்பித்தார்கள். இன்று பல கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை அகற்றுவதற்காக கொடுக்கப்பட்டது என்று நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் இதற்கு நேர்மாறாக சொன்னார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கு பழைய ஏற்பாடு முக்கியமானது என்று அவர்கள் கற்பித்தனர்.

பழைய ஏற்பாடு நம் வாழ்வுக்கு பொருந்துகிறது என்று புதிய ஏற்பாடு பல இடங்களில் கற்பிக்கிறது, ஆனால் நாம் இரண்டு திசைகளை மட்டும் பார்ப்போம். முதலில், இயேசுவின் சில போதனைகளையும் பார்ப்போம், இரண்டாவதாக, அப்போஸ்தலனாகிய பவுலின் சில போதனைகளையும் பார்ப்போம். பழைய ஏற்பாட்டின் பொருத்தத்தைப் பற்றிய இயேசுவின் போதனைகளைப் பற்றி முதலில் சிந்திப்போம்.

## இயேசுவின் போதனைகள்

இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு பழைய ஏற்பாடு எப்படி பொருத்தமாக இருக்கிறது என்பது பற்றியும் பழைய ஏற்பாட்டின் அதிகாரத்தைப் பற்றியும் என்ன கற்பித்தார் என்பதைப் புரிந்துகொள்ள, அவருடைய போதனையின் இரண்டு பக்கங்களை சுருக்கமாகப் பார்ப்போம். பழைய ஏற்பாட்டைப் பற்றி இயேசு கூறிய எதிர்மறையான கருத்துக்களாகத் தோன்றும் சில பகுதிகளுடன் தொடங்குவோம். பின்னர், பழைய ஏற்பாடு எப்படி நாம் வாழ்வோடு பொருந்துகிறது என்பது பற்றிய அவரது தெளிவான நேர்மறையான உறுதிமொழிகளை ஆராய்வோம். பல வியாக்கியான அறிஞர்கள் பழைய ஏற்பாட்டின் எதிர்மறையான கண்ணோட்டங்களாக எடுத்துக் கொண்ட இயேசுவின் சில கருத்துகளுடன் ஆரம்பிக்கலாம்.

### எதிர்மறை கருத்துக்கள்

மத்தேயு 5-7ல் உள்ள இயேசுவின் மலைப் பிரசங்கத்தை நம்மில் அநேகர் அறிந்திருக்கிறோம். இந்த பிரசங்கத்தின் ஒரு கட்டத்தில், இயேசு பல நெறிமுறை சிக்கல்களைப் பேசினார். இந்தப் பிரச்சினைகளுக்கான அவரது அணுகுமுறை பல நல்லெண்ணம் கொண்ட விசுவாசிகளுக்கு இயேசு பழைய ஏற்பாட்டின் போதனைகளை எதிர்த்தார் அல்லது திருத்தினார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. நமக்கு தெரிந்த இந்த வேத பகுதிகளைக் கவனியுங்கள். மத்தேயு 5:21-22 இல் கொலையைப் பற்றிய இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> ”கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்” என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல்

> கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் (மத்தேயு 5:21-22).

மத்தேயு 5:27-28 இல் இயேசு விபச்சாரத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> ”விபசாரஞ் செய்யாதிருப்பாயாக” என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று (மத்தேயு 5:27-28).

மத்தேயு 5:31-32 இல் அவர் விவாகரத்து பற்றி பேசினார்:

> ”தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்கு கொடுக்கக்கடவன்” என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் (மத்தேயு 5:31-32).

மத்தேயு 5:33-34 இல் இயேசு ஆணையிடுதலை எடுத்துரைத்த மாதிரியை நாம் மீண்டும் பார்க்கிறோம்:

> ”அன்றியும், பொய்யாணையிடாமல் உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக” என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்; வானத்தின் பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம் (மத்தேயு 5:33-34).

மத்தேயு 5:38-39 இல் இயேசுவும் பழிவாங்குவதைப் பற்றி பேசினார்:

> ”கண்ணுக்குக் கண், பல்லுக்கு பல்” என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு (மத்தேயு 5:38-39).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இறுதியாக, கிறிஸ்து மத்தேயு 5:43-44 இல் இப்படியாக எதிரிகளை நேசிக்க வேண்டும் என்கிற பிரச்சினையைக் குறித்து பேசினார்:

> உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் (மத்தேயு 5:43-44).

இயேசு தேவனின் உன்னத வெளிப்பாடு என்பதையும், அவருடைய போதனைகள் பழைய ஏற்பாட்டின் போதனைகளை விட மிகவும் முழுமையானவை என்பதையும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அவர் இருதயத்தில் ஊடுருவி, பழைய ஏற்பாடு எட்டாத வழிகளில் தொலைதூர எல்லைகளுக்கு விரிவடைந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பல கிறிஸ்தவர்கள், கொலை, விபச்சாரம், விவாகரத்து, சத்தியம் செய்தல், பழிவாங்குதல் மற்றும் எதிரிகளை நேசித்தல் பற்றிய இயேசுவின் பார்வை உண்மையில் பழைய ஏற்பாட்டிற்கு முரணானது என்று முடிவு செய்துள்ளனர்.

பழைய ஏற்பாட்டு போதனைகளை இயேசு தனது சொந்த, விரிவான வழிமுறைகளுக்கு ஆதரவாக நிராகரித்தார் என்று பல விசுவாசிகள் தவறாக நம்புகிறார்கள். இப்போது, இந்த பிரபலமான கண்ணோட்டம் உண்மைக்கு அருகில் எங்காவது இருந்தால், பழைய ஏற்பாட்டின் நெறிமுறை அதிகாரத்திலிருந்து நம்மைத் திருப்ப இயேசு வந்தார் என்று நினைப்பதற்கு நல்ல காரணம் இருக்கிறது. ஆனால் மத்தேயு 5 இல் இயேசு உண்மையில் என்ன சொன்னார் என்பதை நாம் இன்னும் நெருக்கமாகப் பார்க்கும்போது, இந்தக் கண்ணோட்டம் சரியானதாக இல்லை என்று அறியலாம். இயேசு பழைய ஏற்பாட்டுடன் எந்த வகையிலும் முரண்படவில்லை. மாறாக, அவர் அதன் அதிகாரத்தை உறுதிப்படுத்தினார் மற்றும் அவரது நாளில் பழைய ஏற்பாட்டின் பொதுவான தவறான புரிதல்களுடன் முரண்பட்டார்.

பழைய ஏற்பாட்டுடன் உடன்படாமல் இருப்பதற்குப் பதிலாக, பல வேதபாரகர்களும் பரிசேயர்களும் பழைய ஏற்பாட்டை விளக்கிய விதங்களை இயேசு எதிர்த்தார். இயேசுவின் காலத்தில், வெகு சிலரே வேதத்தை நேரடியாக அணுகியிருந்தனர். இந்த காரணத்திற்காக, இஸ்ரவேலில் உள்ள சாதாரண மக்கள் தங்கள் மதத் தலைவர்களின் வாய்வழி அறிவுறுத்தல்களை பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால் பழைய ஏற்பாட்டிலிருந்து கற்பிப்பதைக் காட்டிலும், வேதபாரகர்களும் பரிசேயர்களும் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டில் சேர்க்கப் பட்ட பாரம்பரியங்களின் அடிப்படையில் போதித்தனர். துரதிர்ஷ்டவசமாக, இந்த பாரம்பரியங்கள் இருதயத்தின் நிலையைக் காட்டிலும் வெளிப்புறக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கீழ்ப்படிதலில் கவனம் செலுத்த முனைகின்றன - ஆனால் இயேசுவின் போதனையிலும் பழைய ஏற்பாட்டிலும் இருதயத்தில் மாற்றம் ஏற்படுவதே முக்கிய கவனமாக இருந்தது.

பொதுவாக, இயேசு தனது சொந்த போதனைகளை - பழைய ஏற்பாட்டிற்கு இசைவாக - "சொல்லப்பட்ட" மற்றும் "கேட்கப்பட்ட" கண்ணோட்டத்துடன் வேறுபடுத்தினார்.. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் வாய்வழி மரபுகளைப் பற்றி இங்கே பேசினார். இயேசுவும் மற்ற புதிய ஏற்பாட்டு நபர்களும் பழைய ஏற்பாட்டைக் குறிப்பிடும்போது, அவர்கள் எப்போதும் "எழுதப்பட்டவை" அல்லது "வாசிக்கப்பட்டவை" பற்றி பேசினர். புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் இயேசு அப்படி அறிமுகப்படுத்தப்பட்ட எதையும் மறுக்கவில்லை. எனவே, மலைப் பிரசங்கத்தில், இயேசு பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டவற்றுடன் உடன்படாமல் இருக்கவில்லை, மாறாக இஸ்ரவேலின் மற்ற எழுத்தாளர்களால் நிலைநிறுத்தப்பட்ட வாய்வழி மரபுகளுடன் முரணபட்டார். இந்த வெளிச்சத்தில், இந்த வாய்மொழி விளக்கங்களைப் பற்றி இயேசு உண்மையில் என்ன சொன்னார் என்பதை நாம் இன்னும் நெருக்கமாகப் பார்க்க வேண்டும்.

> இயேசு மலைப்பிரசங்கத்தில் இந்த சொற்றொடரைப் பயன்படுத்தி, "உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்…" என்று பேசும்போது, பழைய ஏற்பாட்டு பிரமாணம் இப்போது ரத்து செய்யப்படுகிறது என்று அவர் கூறவில்லை. உண்மையில், "நான் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்தேன்" என்று அவர் மிகவும் வெளிப்படையாக கூறுகிறார். ஆனால் இயேசு என்ன செய்கிறார் என்றால், நியாயப்பிரமாண போதகர்கள் தங்கள் சொந்த கற்பித்தல் அதிகாரத்தைப் பற்றி பேச பயன்படுத்தும், நன்கு அறியப்பட்ட ரபீக்களின் நுட்பத்தை அவர் பயன்படுத்துகிறார். "நியாயப்பிரமாணத்தின் போதனைகளைப் பற்றி பாரம்பரியத்தில் உள்ள வெவ்வேறு நபர்கள் சொல்வதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்…" மேலும் இது தற்போதைய அதிகாரத்தை விட கூடுதல் அதிகாரத்துடன் வருகிறது. பழைய ஏற்பாட்டு பிரமாணத்தைத் தள்ளுபடி செய்யாமல், மாறாக இறையியல் மற்றும் கிறிஸ்துவியல் ரீதியாக மிக முக்கியமான ஒன்றைக் கூற, இயேசு இந்த நன்கு அறியப்பட்ட கற்பித்தல் நுட்பத்துடன் தனது கற்பித்தல் அதிகாரத்தை நிறுவுகிறார், அதாவது எனக்கும் பிரமாணத்தைப் பற்றிய எனது போதனைக்கும் சம்பந்தமாக பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை விளக்குவது முக்கியமாகும்.

– Dr. கிரிகோரி ஆர். பெர்ரி

இயேசு எடுத்துரைத்த முரண்பாடுகளைப் பற்றி மீண்டும் சிந்திப்போம். கொலையைக் குறித்த காரியத்தைப் பேசும்போது, வெறுப்பை உள்ளடக்கிய கொலைக்கு எதிரான தடையை இயேசு விரிவுபடுத்தினார் என்று பலர் நம்புகிறார்கள்.ஆனால் பழைய ஏற்பாடு கொலையை மட்டும் கண்டிக்கவில்லை; அது தேவனுடைய மக்களிடையே இருந்த முரண்பாடுகளையும் கண்டிக்கிறது என்பதை உணர வேண்டியது அவசியம்.

தேவனுடைய மக்களிடையே நல்லிணக்கம் மற்றும் அமைதி இருக்க வேண்டும் என்பதை சங்கீதம் 133:1 இல் நன்றாக காண முடியும், அது "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?!" என்று சொல்கிறது. இயேசுவின் நாளில் இருந்த பிரபலமான மரபுகள், யூதர்களிடையே உடல்ரீதியான கொலைக்கு வழிவகுக்காத வரையில் வெறுப்பு மற்றும் கருத்து வேறுபாடுகள் இருப்பதை அனுமதித்தன. இதற்கு நேர்மாறாக, கொலைக்கு எதிரான தடையை வெறுப்புக்கு எதிரான தடையுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் *உண்மையான* பழைய ஏற்பாட்டு தரநிலைகளை இயேசு மீண்டும் வலியுறுத்தினார்.

இயேசு பழைய ஏற்பாட்டின் சரீர வேசித்தனத்திற்கு எதிரான தடைக்கு அப்பால் இருதய விபச்சாரத்தைப் பற்றி பேசினார் என்று விபச்சாரத்தைப் பற்றி பல மக்கள் தவறான புரிதலைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் யாத்திராகமம் 20:17 இல், பத்தாவது கட்டளை இவ்வாறு கூறுகிறது, "பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்." இங்கே, பழைய ஏற்பாடு வெளிப்படையாக பிறரின் துணையை விரும்புவதைத் தடை செய்துள்ளது. வேறுவிதமாகக் கூறினால், இருதயத்தின் வேசித்தனத்தைப் பற்றி இங்கே கூறப்பட்டுள்ளது.பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை மறுப்பது அல்ல, ஆனால் அதை மீண்டும் வலியுறுத்துவதே இங்கே இயேசுவின் வாதமாகும்.

விவாகரத்தைப் பொறுத்தமட்டில், இயேசுவின் காலத்தில், இஸ்ரவேலிலிருந்த பல மதத் தலைவர்கள், ஒரு ஆண் தன் மனைவியை எந்த காரணத்திற்காகவும் விவாகரத்து செய்யலாம் என்று நம்பினர். அவர்கள் சரியான சட்ட ஆவணங்களை வழங்கினால், பழைய ஏற்பாட்டு பிரமாணம் அவர்களுக்கு இந்த உரிமையை அளிக்கும் என்று அவர்கள் கற்பித்தனர். ஆனால் பழைய ஏற்பாடு தேவன் அத்தகைய நடத்தையை அங்கீகரிக்கவில்லை என்பதை தெளிவாகக் குறிப்பிடுகிறது. மல்கியா 2:16ல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம், "'தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்' என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்."

மத்தேயு 19:3-9 இல் இயேசு விவாகரத்து பற்றிய தனது நிலைப்பாட்டை இன்னும் விரிவாக விளக்கினார். விவாகரத்துக்கான அவருடைய எதிர்ப்பு பழைய ஏற்பாட்டின் அடிப்படையிலானது, குறிப்பாக ஆதாம் மற்றும் ஏவாளை உள்ளடக்கிய சிருஷ்டிப்புக் கதையை அடிப்படையாகக் கொண்டது என்பதை அங்கு அவர் தெளிவுபடுத்தினார்.

சத்தியம் செய்யும் நடைமுறையைப் பற்றி, இயேசுவின் நாளில் இருந்த சில ரபீக்கள், ஒருவர் தம்முடைய வார்த்தையைக் கடைப்பிடிப்பதாக சத்தியம் செய்யாதவரை பொய் சொல்ல அனுமதிக்கப்படுகிறது என்று கற்பித்தார்கள். இயேசு இந்த போதனையுடன் உடன்படவில்லை, மேலும் பிரமாணங்களை மீறும் பொய்களை மட்டும் அல்ல, பழைய ஏற்பாடு அனைத்து பொய்களையும் தடை செய்கிறது என்று வலியுறுத்தினார். உதாரணமாக நீதிமொழிகள் 6:16-17 இவ்வாறு தொடங்குகிறது, “ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள்,அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு…”

இதனால்தான் இயேசு மத்தேயு 5:37 இல் தொடர்ந்து இவ்வாறு கூறினார்: ”உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.” இயேசு பழைய ஏற்பாட்டுடன் உடன்படாமல் இருக்கவில்லை, ஆனால் வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களின் வாய்வழி மரபுகள் பழைய ஏற்பாட்டு தரநிலைகளை விட குறைவாக இருப்பதைக் காட்டினார்.

பழிவாங்குதலைப் பற்றி, யாத்திராகமம் 21:24 இல் உள்ள ”கண்ணுக்குக் கண்” பற்றிய அசல் பழைய ஏற்பாட்டு பிரமாணம், தனிப்பட்ட பழிவாங்கலுக்கான தேவனுடைய அங்கீகாரமாக இயேசுவின் நாளில் கருதப்பட்டது. ஒவ்வொரு முறையும் யாராவது உங்களுக்கு ஏதாவது தவறு செய்தால், அவர்களுக்கு சமமான தீங்கு விளைவிக்கும் ஒன்றைச் செய்ய உங்களுக்கு உரிமை உண்டு என்று நம்பப்பட்டது. ஆனால் முதலில், ”கண்ணுக்குக் கண்” என்பது நியாயாபதிகளுக்கான மோசேயின் ஒரு சட்டமாக இருந்தது. இது இஸ்ரவேலின் உத்தியோகபூர்வ நீதிமன்றங்களில் நியாயாபதிகளுக்கு வழிகாட்ட வடிவமைக்கப்பட்டது. நம் காலத்தைப் போலவே, அன்று நியாயாதிபதிகள் தங்கள் தீர்ப்புகளையும் தண்டனைகளையும் நியாயமாகவும், செய்த குற்றங்களுக்கு விகிதாசாரமாகவும் வழங்க வேண்டும்.

மோசே இந்த தரநிலையை தனிப்பட்ட விவகாரங்களுக்குப் பயன்படுத்த விரும்பவில்லை. மாறாக, பழைய ஏற்பாடு, இரக்கமும் தயவும் சாதாரண, அன்றாட வாழ்க்கைக்கான நடத்தையை வழிநடத்த வேண்டுமென கற்பித்தது. லேவியராகமம் 19:18 இவ்வாறு கூறுகிறது, “பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமைகொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக… நான் கர்த்தர்.” நியாயாதிபதிகள் தங்கள் நீதிமன்றங்களில் பின்பற்ற வேண்டிய ஒரு சட்டத்தின் தவறான விளக்கத்துடன் இயேசு உடன்படவில்லை, மேலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தனிப்பட்ட உறவுகளில் நாம் கருணை காட்ட வேண்டும் என்ற பழைய ஏற்பாட்டு போதனையை அவர் உறுதிப்படுத்தினார்.

இறுதியாக, இயேசுவின் நாட்களில் சில போதகர்கள் தங்கள் எதிரிகளை வெறுப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று கற்பித்தனர். "உன்னைப் போலவே உன் அயலானையும் நேசி" என்கிற லேவியராகமம் 19:18 இன் கட்டளையிலிருந்து அவர்கள் யூகிப்பது – உன் எதிரியை நேசிக்க வேண்டாம் என்று சொல்வதற்கு சமமானது தான் இது. ஆனால் நமது எதிரிகளை நேசிக்க பழைய ஏற்பாடு நம்மை ஊக்குவிக்கிறது. உதாரணமாக, யாத்திராகமம் 23:4 இல்,"உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக்கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக" என்று நாம் வாசிக்கிறோம்.

எனவே, நாம் இப்போது பார்த்தபடி, பழைய ஏற்பாட்டின் கருத்துக்களுடன் இயேசு முரண்படவில்லை. மாறாக, அவர் தனது நாளில் இருந்த தவறான விளக்கங்களை எதிர்த்தார் மற்றும் பழைய ஏற்பாட்டின் உண்மையான போதனைகளை மீண்டும் வலியுறுத்தினார்.

> "பூர்வத்தில் உங்களுக்கு இவ்வாறு உரைக்கப்பட்டதை கேட்டிருக்கிறீர்கள், ஆனால் நான் உங்களுக்கு சொல்கிறேன்" என்கிற அறிக்கைகளை மலைப் பிரசங்கத்தில் இயேசு அளிக்கிற போது, இயேசு நியாயப்பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தைப் பெறுவதே இதைப் பார்ப்பதற்கான சிறந்த வழி என்று நான் நினைக்கிறேன். அவர் புதிதாக ஒன்றை அறிமுகப்படுத்துகிறார் என்பதல்ல, ஆனால் தேவன் எதை நோக்கமாகக் கொண்டிருந்தார் என்பதை அவர் வெளிப்படுத்துகிறார். எனவே, "விபச்சாரம் செய்யாதீர்கள்" என்று பிரமாணம் கூறும்போது, தம்முடைய மனைவியல்லாத பெண்களை இச்சையுடன் பார்ப்பதிலிருந்தோ அல்லது தங்கள் சொந்த மனைவிகளை இச்சையாகப் பார்ப்பதிலிருந்தோ அவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது என்று தேவன் ஒருபோதும் நினைக்கவில்லை. எனவே, இயேசு ஒரு புதிய தேவையை அறிமுகப்படுத்தவில்லை, அவர் ஏற்கனவே பிரமாணத்தில் இருந்தவைகளை தெளிவுபடுத்துகிறார்.
>
> – Dr. ஜேம்ஸ் எம். ஹாமில்ட்டன்

பழைய ஏற்பாட்டைப் பற்றிய இயேசுவின் எதிர்மறையான கருத்துக்கள் என்று பலர் தவறாகக் கருதும் இயேசுவின் சில போதனைகளை இப்போது நாம் பார்த்தோம், பழைய ஏற்பாட்டின் அதிகாரம் மற்றும் அவரை பின்பற்றுகிறவர்களுக்கான தற்கால பொருத்தம் பற்றி இயேசு கூறிய

நேர்மறையான உறுதிமொழிகள் அடங்கிய பகுதிகளுக்கு நாம் திரும்ப வேண்டும்.

## நேர்மறையான உறுதிமொழிகள்

பழைய ஏற்பாட்டு வேதாகமத்தின் முழு அதிகாரம் மற்றும் பொருத்தம் பற்றிய கிறிஸ்துவின் நேர்மறையான கண்ணோட்டத்தை தெளிவாக நிரூபிக்கும் எண்ணற்ற பகுதிகள் சுவிசேஷங்களில் உள்ளன. அவர் தனது சொந்த போதனைகளின் அடிப்படையாக பழைய ஏற்பாட்டை அடிக்கடி குறிப்பிடுகிறார். மேலும், மறு ரூப மலையில் இயேசு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்த மோசேக்கும் எலியா தீர்க்கதரிசிக்கும் இடையே நின்ற காட்சியை நாம் மறந்துவிடக் கூடாது. நான்கு சுவிசேஷங்களும் இயேசுவின் பரிபூரண நீதியை வலியுறுத்துகின்றன - அதாவது அவர் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளுக்கு அவர் முழுமையாகக் கீழ்ப்படிந்ததைக் குறித்து வலியுறுத்துகின்றன. இயேசு பழைய ஏற்பாட்டின் போதனைகளுக்கு அடிபணிந்து வாழ்ந்தார். அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்காகவே அவர் வந்து, தம் சீஷர்களையும் அவ்வாறே செய்யும்படி அழைத்தார்.

மத்தேயு 5:17-18 இல் இயேசு சொன்னதைக் கவனியுங்கள்:

> நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 5:17-18).

இங்கே இயேசு "நியாயப்பிரமாணத்தை அல்லது தீர்க்கதரிசனங்களை" அகற்ற வரவில்லை என்று வலியுறுத்தினார் - அதாவது முதல் நூற்றாண்டில் முழு பழைய ஏற்பாட்டையும் குறிப்பிடுவதற்கான பொதுவான வழி அதுவாகும். உண்மையில், வசனம் 17 இன் தொடக்கத்தை நாம் வெறுமனே "எண்ணிக்கொள்ளாதேயுங்கள்" என்று மொழிபெயர்க்க முடியாது, மாறாக, "[எண்ணக்கூட துவங்காதீர்கள்] …" என்று மொழிபெயர்க்கலாம், எனவே, இயேசு சொல்லும் போது சிறிய எழுத்து அல்லது அந்த எழுத்தின் உறுப்பு "அனைத்தும் நிறைவேறும் வரை" நியாயப்பிரமாணம் நிலைத்திருக்கும், இவ்வாறு அவர் பழைய ஏற்பாட்டு வேதாகமத்தை முழுமையாக உறுதிப்படுத்தினார். துரதிர்ஷ்டவசமாக, பல கிறிஸ்தவர்கள் இந்த வசனங்களைப் படித்து, "பழைய ஏற்பாட்டை ஒழிக்க நான் வரவில்லை, ஆனால் அதைப் பொருத்தமற்றதாக மாற்றுவதற்காக வந்தேன்" என்று இயேசு குறிப்பிட்டதாக நினைக்கிறார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால் இது உண்மை அல்ல. மத்தேயு 5:19 ல் இயேசு சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான் (மத்தேயு 5:19).

இந்தப் பகுதியில் இயேசு சொன்னதைக் கவனியுங்கள். இதில் உள்ள சிறிய கட்டளைகளைக் கூட மக்கள் கடைப்பிடிக்கத் தவறினால், அல்லது பிறரைப் புறக்கணிக்கும்படி ஊக்கப்படுத்தினால், அவர்கள் ”பரலோகராஜ்யத்தில் மிகச்சிறியவர்களாக” இருப்பார்கள். இந்த கட்டளைகளில் சிறியதையாகிலும் யாரேனும் கடைப்பிடித்து, பிறருக்குக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொடுத்தால், ”பரலோகராஜ்யத்தில்” பெரியவர்களாக இருப்பார்கள்.

இயேசு தம் காலத்தில் யூதர்களைப் பற்றி அறிந்திருந்தார், அதுபோல இன்றைய விசுவாசிகளையும் இயேசு அறிவார். பழைய ஏற்பாட்டில் இருக்கிற ஒரு சிலவற்றை மட்டுமே நாம் தேர்ந்தெடுத்து பயன்படுத்துபவர்களாக இருக்கிறோம். நாம் விரும்புகிற மற்றும் புறக்கணிக்கும் பகுதிகளில் அல்லது நமக்குப் பிடிக்காத மற்றும் நாம் நிராகரிக்கிற வேத பகுதிகளில் கவன செலுத்த முனைகிறோம். ஆனால், பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளை மட்டும் அல்லாமல், முழு பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு விவரத்தையும் சீஷர்கள் உறுதிப்படுத்தி பின்பற்ற வேண்டும் என்று இயேசு வலியுறுத்தினார். மத்தேயு 5:20 இல் அவர் இதைக் கூறின விதத்தைப் பாருங்கள்:

> வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 5:20).

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் பழைய ஏற்பாட்டை தேவனுடைய வார்த்தை என்று நம்புவதாகக் கூறி அதற்கு கீழ்படியாமல் இருக்கும் மாய்மாலத்தில் ஈடுபடக்கூடாது.

> பழைய ஏற்பாட்டைப் பொறுத்தவரை, லூக்கா 24 இல், உயிர்த்தெழுந்த இயேசு, எம்மாவூருக்கு செல்லும் சாலையில் சீஷர்களுக்கு பழைய ஏற்பாட்டை போதிக்கிறார், மேலும் அவர் தன்னைப் பற்றிய விஷயங்களை பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். இப்போது, இயேசு பழைய ஏற்பாட்டை முக்கியமானதாகப் பார்த்தார், அது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவரைச் சுட்டிக்காட்டுகிறது என்கிறார். மேலும், "இதோ பார், உன்னிடம் உயிர்த்தெழுதல் இருக்கிறது, அது அற்புதமான காரியம், ஆனால் இப்போது நான் உங்களுடன் உயிர்த்தெழுந்தவராக இருப்பதால், பழைய ஏற்பாடும் அதன் பின்னணியும் தேவையில்லை என்று நினைக்க வேண்டாம். மாறாக, என்னைப் புரிந்துகொள்வதற்கும் உலகத்திற்கான தேவனுடைய நோக்கங்களைப் புரிந்துகொள்வதற்கும் நீங்கள் இன்னும் அதிகமாக கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது." எனவே, இயேசு வேறு பல நிகழ்வுகளிலும் பழைய ஏற்பாட்டை உறுதிப்படுத்துவதை நாம் பார்க்கிறோம். அதாவது, அவர் சோதிக்கப்படும்போது, "எழுதப்பட்டிருக்கிறது... எழுதப்பட்டிருக்கிறது... எழுதப்பட்டிருக்கிறது..." என்று அவர் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே இருக்கிறார், அவர் வேதத்திற்கு அடிபணிந்திருந்தால், அவரைப் பின்பற்றுபவர்களாகிய நாம் எவ்வளவு அதிகமாக அடிபணிய வேண்டும் என்று எஜமானர் நமக்குக் காட்டுகிறார்..

– Dr. பீட்டர் வாக்கர்

இயேசுவின் போதனைகள் பழைய ஏற்பாடு இன்று நமக்கு எவ்வளவு பொருத்தமாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றன என்று இப்போது நாம் பார்த்தோம், புதிய ஏற்பாட்டின் மற்றொரு பகுதிக்கு, அதாவது அப்போஸ்தலனாகிய பவுலின் போதனைகளுக்கு நாம் திரும்ப வேண்டும்.

## பவுலின் போதனைகள்

மொத்தத்தில், சுவிசேஷ கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டில் பவுலின் நிருபங்களை பெரிதும் சார்ந்துள்ளனர். ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கைக்கான பழைய ஏற்பாட்டின் பொருத்தத்தைப் பற்றிய பவுலின் அணுகுமுறையை நாம் தவறாகப் புரிந்துகொள்கிறோம் எனத் தோன்றுகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை பழைய ஏற்பாட்டின் அதிகாரத்திலிருந்து பவுல் விடுவித்ததாக சில நல்ல கிறிஸ்தவர்கள் கூட மீண்டும் மீண்டும் வாதிட்டனர். ஆனால், பல வியாக்கியான அறிஞர்கள் சுட்டிக்காட்டியபடி, இந்த விஷயங்களில் பவுலுக்கும் இயேசுவுக்கும் இடையே சரியான இணக்கம் இருந்தது. இயேசுவைப் போலவே, பவுலும் பழைய ஏற்பாட்டு வேதாகமத்தை தவறாகக் கையாண்ட வழிகளை எதிர்த்தார், ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கை மீதான அவற்றின் சந்தேகத்திற்கு இடமில்லாத அதிகாரத்தையும் பொருத்தத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த விஷயங்களில் இயேசுவின் கண்ணோட்டத்தை ஆராய்ந்தது போலவே பவுலின் போதனைகளையும் ஆராய்வோம். முதலில், பழைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்பாட்டைப் பற்றி பவுல் எதிர்மறையான கருத்துக்களைக் கூறியதாகத் தோன்றும் ஒரு பகுதியைப் பார்ப்போம். இரண்டாவதாக, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு பழைய ஏற்பாடு எப்படி பொருத்தமாக இருக்கிறது என்பது பற்றிய அவரது நேர்மறையான உறுதிமொழிகளில் சிலவற்றைக் கருத்தில் கொள்வோம். பழைய ஏற்பாட்டைப் பற்றி பவுல் எவ்வாறு எதிர்மறையான கருத்துக்களைக் கூறியதாகத் தோன்றுகிறது என்பதை முதலில் கவனியுங்கள்.

## எதிர்மறை கருத்துக்கள்

கலாத்தியர் 3:1-5 இல் உள்ள இந்த நன்கு அறியப்பட்ட வார்த்தைகளைக் கவனியுங்கள்.

> புத்தியில்லாத கலாத்தியரே! நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்: நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? நீங்கள் இத்தனை புத்தியீனரா? ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்? (கலாத்தியர் 3:1-5).

இந்த வேத பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல் "நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்" மற்றும் "விசுவாசம்" ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டினார் என்பதைக் கவனியுங்கள். புதிய ஏற்பாடு அல்லது கிறிஸ்தவ வாழ்க்கை முறையின் தார்மீக வழிமுறைகளுக்கு எதிராக பழைய ஏற்பாட்டின் தார்மீக போதனைகளை இந்த மாறுபாடு அமைக்கிறது என்று பலர் கருதுகின்றனர்.

பவுலின் எழுத்துக்களில் உள்ள இவை மற்றும் இதே போன்ற அறிக்கைகள், கிறிஸ்தவ விசுவாசத்தின் தீவிரமான வேறுபட்ட போதனைகளுக்கு ஆதரவாக இருக்கிற பழைய ஏற்பாட்டு போதனைகள் நமக்கு பொருத்தமாக இல்லையென்று பவுல் அதை நிராகரித்தார் என்று பலர் நினைக்க வழிவகுத்தது. உண்மையில்,பழைய ஏற்பாட்டை அதிகாரபூர்வமான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வழிகாட்டுதலை வழங்குவது போல் நடத்துவது நற்செய்தியிலிருந்து திரும்புவதாக பல கிறிஸ்தவர்கள் வாதிடுகின்றனர். ஆயினும்கூட, கலாத்தியரின் முழுக் கடிதத்தையும், பவுலின் நிருபங்களின் மற்ற பகுதிகளையும் நாம் இன்னும் கவனமாகப் பார்க்க வேண்டும். அங்கே, இயேசுவைப் போலவே, பவுலும் பழைய ஏற்பாட்டை எதிர்க்கவில்லை என்பதைக் காண்கிறோம். அதன் துஷ்பிரயோகத்தை அவர் எதிர்த்தார். ஒரு சடங்காச்சாரமான மதத்திற்கான வழிகாட்டியாக பழைய ஏற்பாட்டை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக பவுல் உறுதியாக நின்றார். கலாத்தியர் 3:10-13 இல் கலாத்திய சபைகளில் பவுல் பேசிய விதத்தை கவனியுங்கள்:

> நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; "நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே. " நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; "அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்." "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்" என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலாத்தியர் 3:10-13).

இந்த வேத பகுதியில் குறிப்பிடுவது போல, நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுவதால் ஒருவன் நீதிமானாக்கபட முடியும் என்கிற போதனையை பவுல் எதிர்த்தார். இதுவே நமது நோக்குநிலையாக இருக்கும்போது, நாம் சபிக்கப்பட்டவர்களாக இருப்போம், ஏனென்றால் நாம் தேவனுடைய பிரமாணத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க மாட்டோம். நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து தப்பிக்க ஒரே வழி, தேவனுடைய சாபத்தை தன்மீது சுமந்த கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதுதான்.

பவுல் பழைய ஏற்பாட்டை ஒருபோதும் எதிர்க்கவில்லை. பழைய ஏற்பாட்டின் போதனை கிறிஸ்தவர்களுக்குப் பொருத்தமற்றது என்று அவர் ஒருபோதும் கருதவில்லை. மாறாக, கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதற்குப் பதிலாக நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதில் இரட்சிப்பு இருக்கிறது என்று கூறிய கள்ள போதகர்களை அவர் எதிர்த்தார். உண்மையில், கலாத்தியர்களுக்கு எழுதிய கடிதத்தில், தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவது விசுவாசத்தினால் மட்டுமே என்ற தனது புதிய

ஏற்பாட்டின் கொள்கையை நிரூபிக்க பழைய ஏற்பாட்டை பவுல் உபயோகித்தார். கலாத்தியர் 3:11ல் உள்ள பவுலின் வார்த்தைகளை மீண்டும் கவனியுங்கள், அங்கு அவர் ஆபகூக் 2:4 யை மேற்கோள் காட்டினார்:

> விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (கலாத்தியர் 3:11).

ஏறக்குறைய அதே வழியில், ரோமர் 4:1-12 இல் ஆபிரகாமின் வாழ்க்கையைப் பயன்படுத்தி இந்தப் பழைய ஏற்பாட்டுக் கொள்கையை பவுல் விளக்கினார். அவருடைய பார்வையில், விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானக்கப்பட முடியும் என்ற புதிய ஏற்பாட்டு போதனை உண்மையில் பழைய ஏற்பாட்டின் போதனையில் வேரூன்றியுள்ளது.

> பவுல் புறஜாதிகளுக்கு ஒரு அப்போஸ்தலனாக இருந்தார், ஆனால் தனது சொந்த நாட்டு மக்களையும், தனது சொந்த யூத மக்களையும் நேசித்தார். அவர்கள் உண்மை எது என்று பார்க்க வேண்டும் என்று அவர் விரும்பினார், அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் ஒரு ஐக்கியத்திற்குள் வர வேண்டும் என்று அவர் விரும்பினார், உண்மையில் அவர்களின் பாரம்பரியம், அதாவது பழைய ஏற்பாட்டில், மக்கள் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்களுக்குக் காட்ட முயற்சிக்கிறார். மற்றும் அவர் ஆபிரகாம் போன்ற விசுவாசத்தின் முக்கிய முற்பிதாக்களைப் பற்றி விளக்கினார், உதாரணமாக, நமது பெரிய பிதாவான ஆபிரகாம் கூட விசுவாசத்தால் தான் இரட்சிக்கப்பட்டார் என்பதை அவர்களுக்கு எடுத்துரைக்கிறார். தான் போதிக்கும் செய்தி உண்மையில் பழைய ஏற்பாட்டில் வேரூன்றியுள்ளது என்றும், பழைய ஏற்பாட்டின் நிறைவேற்றம் இயேசுவே என்றும் அவர் வலியுறுத்தினார். தனது சொந்த தேசத்து மக்களை நம்ப வைப்பதற்கு பவுலுக்கு அது முக்கியமான விஷயங்களில் ஒன்றாக இருந்தது. எனவே, விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு என்கிற செய்தியை விளக்குவதற்கு பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்துவது அவருக்கு முக்கியமானதாக இருந்தது.
>
> – Dr. உயானி சிண்டோ

மோசேயின் பிரமாணம் உட்பட முழு பழைய ஏற்பாட்டையும் பவுல் விரும்பினார். ரோமர் 7:12 இல், நியாயப்பிரமாணம் ”பரிசுத்தமானது, நீதியானது, நல்லது” என்று எழுதினார்.ஆனால் இரட்சிப்பைப் பெறுவதற்கான ஒரு வழியாக தேவனுடைய நியாயப்பிரமாணத்தை நாம் தவறாகப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பயன்படுத்தும்போது, அதை கொடுக்கப்பட்ட நோக்கத்திற்கு மாறாக மாற்றுகிறோம். பழைய ஏற்பாடு முழுவதும், எதிர்காலத்தில் வரவிருக்கும் மேசியாவைப் பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் விசுவாசத்தின் மூலம் தேவனுடைய கிருபையால் மக்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து இரட்சிக்கப்பட்டனர். தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவது அவர்கள் இரட்சிக்கப்பட்ட கிருபைக்கு நன்றி செலுத்துவதாக இருந்தது. இன்றும் இதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டின் தார்மீக அறிவுரைகள் கிறிஸ்தவர்களுக்கு பொருத்தமானவை, இரட்சிப்பை ஆதாயப்படுத்துவதற்கான ஒரு வழி அது அல்ல, மாறாக கிறிஸ்துவில் நாம் இலவசமாக பெற்ற இரட்சிப்புக்கு நமது நன்றியைக் காட்டுவதற்கான ஒரு வழியாகும்.

பவுலின் போதனைகளில் உள்ள, பழைய ஏற்பாட்டைப் பற்றிய எதிர்மறையான கருத்துக்கள் உண்மையில் பழைய ஏற்பாட்டை கிரியைகள்-நீதியின் அமைப்பாக தவறாகப் பயன்படுத்துகின்றன என்பதைப் பற்றி பார்த்த பிறகு, இப்போது பழைய ஏற்பாட்டின் அதிகாரம் மற்றும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு அது எவ்வாறு பொருந்தும் என்பது பற்றிய அப்போஸ்தலருடைய திடமான, நேர்மறையான உறுதிமொழிகளைப் பார்க்க வேண்டும்..

## நேர்மறையான உறுதிமொழிகள்

> பவுல் ஒரு யூதர். அவர் எப்போதும் யூதனாகவே இருந்தார். அவரது பின்னணி யூத பின்னணி... அவர் தனது யூதத்துவத்தைப் பற்றி பேசுகிறார். அவர் வேதத்தில் உறுதியாக இருந்தார். பிலிப்பியர் நிருபத்தில் அவர் ஒரு பரிசேயராக அவர் அதில் உறுதியாக இருந்தார் என்று கூறுகிறார். அவர் தனது பின்னணியைப் பற்றி கலாத்தியர் நிருபத்தில் கதையைச் சொல்லும்போது, அவர் தனது மூதாதையர்களை அறிந்து கொள்வதில் தனது நண்பர்களை விட தான் அதிக வைராக்கியம் வைத்திருந்ததைப் பற்றி பேசுகிறார். அவர் அங்கு யூத மதத்தைப் பற்றி பேசுகிறார். அவர் பழைய ஏற்பாட்டின் போதனைகள், எபிரெய வேதாகமத்தின் போதனைகளுக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டதைப் பற்றி பேசுகிறார். அவர் புறஜாதிகளிடம் செல்லும் போது இயேசு யார் என்ற அவரது போதனையில் வருவது அவருடைய யூத பின்னணியாகும். அவர் தேசங்களுக்குச் செல்லும்போது, இயேசுவின் வருகை யூத மேசியாவின் வருகை என்பதையும், தேசங்களுக்குச் சுவிசேஷம் வந்தது என்பது ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> என்பதையும் யூதர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். … பவுல் பழைய ஏற்பாட்டு வேதாகமத்தை நிராகரிக்கவில்லை, ஆனால் இப்போது அவர் அவற்றைப் புதிதாகப் புரிந்துகொள்கிறார். எபிரெய வேதாகமம் பேசிய அனைத்தையும் இயேசு நிறைவேற்றுகிறார் என்பதை அவர் புரிந்துகொள்கிறார்.
>
> – Dr. – Dr.

ரோமர் 15:4 இல் பழைய ஏற்பாட்டைப் பற்றி பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது (ரோமர் 15:4).

”முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம்” மற்றும் ”வேத வசனத்தினால்” ஆகிய சொற்களைப் பற்றி பவுல் இங்கே பேசும்போது, பழைய ஏற்பாட்டை மனதில் வைத்திருந்தார். இந்த வேத பகுதியின்படி, நமது கிறிஸ்தவ நம்பிக்கையை வளர்த்து, பராமரிக்க பழைய ஏற்பாடு அவசியமாகும். பழைய ஏற்பாட்டின் கதைகள், பிரமாணங்கள், சங்கீதங்கள், தீர்க்கதரிசனங்கள் ஆகியவை ”நமக்கு போதனைகாக” உள்ளன.

ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி, பவுல் 2 தீமோத்தேயு 3:16-17 இல் பழைய ஏற்பாட்டின் பொருத்தத்தைப் பற்றிய தனது வலுவான மற்றும் தெளிவான உறுதிமொழியை வழங்கினார். அங்கே அவர் இவ்வாறு எழுதினார்:

> வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16-17).

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இந்த வசனத்தை நன்கு அறிந்திருக்கிறார்கள், ஆனால் ”வேத வாக்கியங்களெல்லாம்” என்ற வார்த்தைகள் புதிய ஏற்பாட்டைக் குறிக்கின்றன என்று நாம் அடிக்கடி கற்பனை செய்கிறோம். சரி, இந்த வார்த்தைகள் புதிய ஏற்பாட்டைப் பற்றிய நமது கண்ணோட்டத்தில் தாக்கங்களைக் கொண்டுள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பவுல் தீமோத்தேயுவுக்கு “எல்லா

வேதவாக்கியங்களையும்” பற்றி எழுதியபோது, அவர் குறிப்பாக பழைய ஏற்பாட்டை மனதில் வைத்திருந்தார். பழைய ஏற்பாடு நமக்குத் தரும் அற்புதமான விஷயங்களை கவனியுங்கள் - அது போதிக்கவும், கடிந்துகொள்ளவும், திருத்தவும், நீதியைப் பயிற்றுவிக்கவும், எல்லா நல்ல கிரியைக்கும் நம்மை ஆயத்தப்படுத்துகிறது. சுருக்கமாக, பழைய ஏற்பாடு கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்று பவுல் கூறினார்.

> ”அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது” என்று பவுல் கூறும்போது, அவர் பழைய ஏற்பாட்டைப் பற்றி பேசினார். அவர் பழைய ஏற்பாடு எப்படி நம்முடன் பொருந்துகிறது என்பது பற்றி பேசுகிறார். மேலும் இது பொருத்தமானது மட்டுமல்ல, அது முற்றிலும் பொருத்தமானது என்றும் அவர் கூறுகிறார்... பழைய ஏற்பாடு இல்லாமல், புதிய ஏற்பாடு பயன்படுத்தும் பல்வேறு சொற்களைப் புரிந்துகொள்வதற்கான எந்த சூழலும் நமக்கு இல்லை. உதாரணமாக, தேவன் - இந்த தேவன் யார்? அல்லது கிறிஸ்து - கிறிஸ்து என்றால் என்ன? அல்லது பாவம், இரட்சிப்பு, சுவிசேஷம் போன்ற கருத்துக்கள். இவை அனைத்தும் பழைய ஏற்பாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட சொற்கள், மேலும் பழைய ஏற்பாட்டில் அவற்றின் பயன்பாட்டைப் புரிந்துகொள்வதன் மூலம் மட்டுமே புதிய ஏற்பாட்டை அறிந்தும் பொறுப்பான முறையிலும் படிக்க முடியும்.
>
> – Dr. மேத்யூ நியூகிர்க்

பழைய ஏற்பாட்டை அதன் தூரம் மற்றும் அது எவ்வாறு வாழ்வுடன் பொருந்துகிறது என்பவைகளின் அடிப்படையில் நாம் படிக்க வேண்டும் என்று பார்த்தோம். இப்போது, இந்தப் பாடத்தில், இன்றைய நம் வாழ்வில் பழைய ஏற்பாட்டை அப்பியாசப்படுத்துதல் என்ற நமது மூன்றாவது முக்கிய தலைப்புக்கு திரும்புவோம்.

# பிரயோகம்

இன்றைய கிறிஸ்தவர்களுக்கு பழைய ஏற்பாடு பொருத்தமானது என்று நாம் கூறுவது ஒரு விஷயம், ஆனால் இந்த உண்மையை நடைமுறைக்குக் கொண்டுவருவது முற்றிலும் வேறுபட்டதாகும். சில நேரங்களில் பழைய ஏற்பாடு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நமக்கு எவ்வாறு பொருந்தும் என்பதைப் பார்ப்பது கடினம் அல்ல, ஆனால் மற்ற சமயங்களில் நமக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே உள்ள தூரத்தின் காரணமாக அது மிகவும் கடினமானதாயிருக்கிறது. இது பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு பழைய ஏற்பாட்டைப் படிக்கவும் பயன்படுத்தவும் உதவுகிறார் என்பதை உறுதியளிக்கிறது. நம்முடைய சொந்த பலத்தில் நாம் எதைச் சாதிக்க முடியுமோ அதைத் தாண்டிய வழிகளில் அவர் நமக்குக் கற்பிக்கிறார். ஆனால் பழைய ஏற்பாட்டை நம்மால் முடிந்தவரை ஆழமாகப் படிப்பது நமது பொறுப்பு, அதனால் அதை இன்று நம் வாழ்வில் சரியாக பிரயோகிக்க முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிடம் இந்தப் பொறுப்பைப் பற்றி பேசினார். 2 தீமோத்தேயு 2:15 இல் பவுல் இவ்வாறு கூறினார்:

> நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு
> (2 தீமோத்தேயு 2:15).

பவுல் இங்கே கூறியது போல், அங்கீகரிக்கப்பட, பழைய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் எர்காடேஸ் (ἐργάτης) - அதாவது, தேவனுடைய வார்த்தையை சரியாகக் கையாள்வதில் விடாமுயற்சியுடன் பிரயாசப்படும் ஊழியக்காரனாக நாம் பழைய ஏற்பாட்டை அணுக வேண்டும்.

பழைய ஏற்பாட்டின் நவீன பிரயோகத்தை மூன்று படிகளில் பார்ப்போம். முதலில், பழைய ஏற்பாட்டை நம் வாழ்வில் பயன்படுத்த முயற்சிக்கும்போது நாம் கடக்க வேண்டிய சவால்களை அடையாளம் காண்போம். இரண்டாவதாக, அதை நம் வாழ்வில் பயன்படுத்துவதை சாத்தியமாக்கும் இணைப்புகளை நாம் கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக, அதைப் பயன்படுத்தும்போது நாம் அறிந்துகொள்ளவேண்டிய வளர்ச்சியை ஆராய்வோம். பழைய ஏற்பாட்டை இன்று நம் வாழ்வில் அப்பியாசப்படுத்தும்போது நாம் எதிர்கொள்ளும் சவால்களுடன் ஆரம்பிக்கலாம்.

## சவால்கள்

இந்தப் பாடத்தில் நாம் முன்பு பார்த்தது போல், தேவன் முதன்முதலில் பழைய ஏற்பாட்டை நீண்ட காலத்திற்கு முன்பு வாழ்ந்த தம்முடைய மக்களுக்குக் கொடுத்தார், அதனால் அவர்கள் அவர்களின் காலத்தில் வாழ முடிந்தது. ஆனால் நாம் பார்த்தது போல், அவர் இந்த வேதவசனங்களை நமக்கும் கொடுத்தார், அதனால் நாம் நம்முடைய காலங்களில் வாழ முடியும். ஆனால் நாம் பழைய ஏற்பாட்டின் உலகத்திலிருந்து மிகவும் வித்தியாசமான உலகில் வாழ்கிறோம். நமக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே ஒரு பெரிய

இடைவெளி உள்ளது, நாம் பழைய ஏற்பாட்டை அப்பியாசப்படுத்தும் போது அந்த இடைவெளியை கருத்தில் கொள்ள வேண்டும். 1 கொரிந்தியர் 10:11 ஐக் கவனியுங்கள், அங்கு அப்போஸ்தலனாகிய பவுல் பழைய ஏற்பாட்டினுடைய பிரயோகத்தின் சவாலை சுருக்கமாகக் கூறினார். அங்கே அவர் இவ்வாறு எழுதினார்:

> இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது (1 கொரிந்தியர் 10:11).

இந்த பத்தியின் பெரிய சூழல் மூலம், எகிப்தில் இருந்து இஸ்ரவேல் வெளியேறியது மற்றும் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு அவை எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பது பற்றிய பழைய ஏற்பாட்டு கதைகளை பவுல் மனதில் வைத்திருந்ததை நாம் அறிந்து கொள்கிறோம். அவர் குறைந்தது மூன்று விஷயங்களை முன்னிலைப்படுத்தியிருப்பதைக் கவனியுங்கள். முதலாவதாக, அவர் தொலைதூர கடந்த கால நிகழ்வுகளைப் பற்றி பேசி, ”இவைகளெல்லாம் சம்பவித்தது … எழுதப்பட்டும் இருக்கிறது” என்று கூறினார். இரண்டாவதாக, அந்தக் கதைகள் “நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது” என்று பவுல் தன்னையும் கொரிந்துவிலிருந்த தன் சக கிறிஸ்தவர்களையும் குறிப்பிட்டார். மூன்றாவதாக, ”உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு” என்று விவரிப்பதன் மூலம், பழைய ஏற்பாட்டு நாட்களுக்கும் கிறிஸ்தவ யுகத்திற்கும் இடையில் நிறைய காரியங்கள் நடந்தது என்பதை பவுல் கூறுகிறார். கிறிஸ்தவர்கள் வரலாற்று யுகங்களின் முடிவில், வரலாறு நிறைவேறும் காலங்களில் வாழ்கின்றனர். அப்போஸ்தலனின் வார்த்தைகள் பழைய ஏற்பாட்டின் நவீன பயன்பாட்டின் சவாலை வெளிப்படுத்துகின்றன.

> 1 கொரிந்தியர் 10 இல் பவுல் சொல்வது எனக்கு மிகவும் பிடிக்கும். எனவே, 1 கொரிந்தியர் 10 இல், அவர் இஸ்ரவேலின் வரலாற்றையும், பழைய ஏற்பாட்டு வேதாகமத்தில் இந்த வரலாறு எழுதப்பட்டிருப்பதையும் பிரதிபலிக்கிறார், மேலும் அவர் பெரும்பாலும் புறஜாதிகளாயிருந்த கொரிந்தியர்களிடம், “இவை நடந்தன, அவைகளும் நம்முடைய எச்சரிப்புக்காக எழுதப்பட்டன” என்று கூறுகிறார். எனவே, வேதம் மக்கள் மீது அதிகாரம் செலுத்துகிறது, இருப்பினும், இருப்பினும், முதல் நிகழ்வில் அந்த மக்கள் பார்வையில் இருக்கவில்லை, ஆனால் தேவன் அவர்களை தன் பார்வையில் வைத்திருந்தார். வேதாகமம் எழுதப்பட்டது தேவனுடைய சர்வாதிகார மேற்பார்வையில் தான். இது ஆரம்பத்தில் வேறு பார்வையாளர்களுக்காக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எழுதப்பட்டாலும், அவர் அதை கொண்டு நம்மிடமும் பேச விரும்புகிறார்.

– Dr. – Dr.

பவுலின் வார்த்தைகள் குறிப்பிடுவது போல, பழைய ஏற்பாட்டை நம் காலத்திற்குப் பயன்படுத்துவதில் உள்ள சவால்களைச் சந்திக்க, நாம் மூன்று விஷயங்களைக் கையாள வேண்டும். முதலில், பழைய ஏற்பாட்டின் பண்டைய உலகத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்; இரண்டாவதாக, நமக்கும் அந்த பண்டைய உலகத்திற்கும் இடையிலான வரலாற்று முன்னேற்றங்களை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்; மூன்றாவதாக, இந்த முன்னேற்றங்கள் மூலம் நாம் கற்றுக்கொள்வதை நம் உலகிற்கு கொண்டு வர வேண்டும். பழைய ஏற்பாட்டின் பண்டைய உலகத்தில் கவனம் செலுத்துவது எவ்வளவு முக்கியம் என்பதை முதலில் கவனியுங்கள்.

## பண்டைய உலகம்

பழைய ஏற்பாட்டை முதலாவதாக பண்டைய உலகத்தின் அடிப்படையில் நம்மால் முடிந்தவரை வியாக்கியானம் செய்வது நமது முக்கிய பணிகளில் ஒன்றாகும். ஆனால், நாம் கடினமாக உழைத்தாலும், அதைச் சரியாகச் செய்ய மாட்டோம். இன்று நாம் வாழும் உலகம் நம் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, நாம் எப்போதும் முழுமையாக தவிர்க்க முடியாத நவீன முன்கணிப்புகளுடன் வேதத்தின் பண்டைய நூல்களை அணுகுவோம். துரதிர்ஷ்டவசமாக, இந்த உண்மை பெரும்பாலும் பழைய ஏற்பாட்டில் நவீன மனிதர்களாக நாம் நம்புவதை வெறுமனே வாசிப்பதற்கான ஒரு நியாயமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் அவ்வாறு செய்வது வேதவசனங்களுக்கு நாம் கீழ்ப்படியாமல், வேதத்தை நமக்குக் கீழ்ப்படுத்துவதற்கு சமமாகிறது. எனவே, நமது நவீன சார்புகளிலிருந்து நாம் முழுமையாகத் தப்ப முடியாது என்றாலும், உண்மையுள்ள அனைத்து மாணவர்களும் பழைய ஏற்பாட்டின் வேத பகுதிகளை முடிந்தவரை அவற்றின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள விடாமுயற்சியுடன் படிக்க வேண்டும்.

எளிமையாகச் சொன்னால், பழைய ஏற்பாட்டுப் பகுதியின் உண்மையான அர்த்தம், தேவனும் அவருடைய தூண்டுதலால் எழுதிய எழுத்தாளர்களும் வேத வசனங்கள் மூலமாக அதன் முதல் பார்வையாளர்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் ஆகும். ஒரு மிக முக்கியமான அர்த்தத்தில் பார்த்தால், தேவன் மற்றும் அவரால் ஏவப்பட்ட எழுத்தாளர்கள் நம்மிடம் நேரடியாகப் பேசுவதை நாம் கேட்காமல் அவர்கள் மற்றவர்களிடம் பேசியதை நாம் கேட்கிறோம். எனவே, நாம் பழைய ஏற்பாட்டைப் படிக்கும்போது, முதல் வாசகர்களின் முன்னுரிமைகள் என்ன? அவர்கள் எதை நம்பினார்கள்? அவர்களின் சூழ்நிலைகள் என்ன? அவர்களுடைய நாட்களில் தமக்கு

அடிபணியும்படி தேவன் அவர்களை எப்படி அழைத்தார்? போன்ற கேள்விகளைக் கேட்பது முக்கியம். இந்த வகையான கேள்விகளுக்கு பதிலளிப்பது எப்போதும் எளிதானது அல்ல. ஆனால் வேத வசனங்களின் உண்மையான அர்த்தத்தைப் பின்தொடர்வது அனைத்து நவீன பயன்பாட்டிற்குமான போக்கை அமைக்கிறது.

பழைய ஏற்பாட்டின் பண்டைய உலகத்தில் நாம் போதுமான கவனம் செலுத்தியவுடன், பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கும் நமது காலத்திற்கும் இடையில் நிகழ்ந்த வரலாற்று முன்னேற்றங்களைக் கையாள்வதற்கான சவாலை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

## வரலாற்று வளர்ச்சி

வேறு சில மதங்களின் புனித நூல்களைப் போலல்லாமல், பழைய ஏற்பாட்டின் இறையியல் போதனைகள் காலப்போக்கில் படிப்படியாக வளர்ந்தன. தேவன் தன்னைப் பற்றியும், உலகம் மற்றும் மக்களைப் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்திய பல வழிகளை பழைய ஏற்பாடு குறிக்கிறது. இஸ்ரவேலின் முற்பிதாக்களின் நாட்களிலும், மோசேயின் நாட்களிலும், இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்த காலத்திலும் கொடுக்கப்பட்ட தேவனுடைய வெளிப்பாடுகளுடன் அது தொடர்கிறது. ஆனால் அது அங்கு நிற்பதில்லை. இஸ்ரவேலை ராஜாக்கள் ஆண்ட சகாப்தத்திலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து இஸ்ரவேல் நாடுகடத்தப்பட்ட சோகத்தின்போதும், இறுதியாக சில இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்பிய பிறகு ஏற்பட்ட போராட்டத்தின் காலத்திலும் தேவன் கொடுத்த வெளிப்பாடுகளை நாம் காண்கிறோம். தேவன் தம்முடைய மக்களுக்கு ஒருமுறை எதையாவது வெளிப்படுத்திய பிறகு, அந்தக் கருப்பொருள் அல்லது தலைப்பு தொடர்பான எதையும் மீண்டும் கூறவில்லை என்பது இதன் அர்த்தம் இல்லை. மாறாக, பழைய ஏற்பாட்டிற்குள்ளேயே, தேவன் தொடர்ந்து மேலும் மேலும் வெளிப்படுத்தினார்.

இதற்கு அப்பால், புதிய ஏற்பாட்டின் போதனைகளிலும் வேதாகம விசுவாசத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் தோன்றுகின்றன. புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டின் அதிகாரத்தை ஒப்புக்கொள்கிறது, ஆனால் இது புதிய ஏற்பாட்டு காலங்களில் மேலும் அதன் முன்னேற்றங்களை வெளிப்படுத்துகிறது. எனவே, ஒவ்வொரு முறையும் பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியை இன்று நம் வாழ்வில் பயன்படுத்தும்போது, அதனுடைய உண்மையான அர்த்தத்தைத் தாண்டி, பண்டைய பழைய ஏற்பாட்டு உலகத்திற்கும் நமது நவீன உலகத்திற்கும் இடையில் நடந்த பன்மடங்கு வரலாற்று முன்னேற்றங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

வேதாகம நம்பிக்கை பல நூற்றாண்டுகளாக ஒரே மாதிரியாகவே இருக்கவில்லை, ஆனால் தேவன் ஒரு மதத்தை தொடங்கி அதை நிராகரித்து,

பின்னர் புதிய ஒரு மதத்தை உருவாக்கினார் என்பது இதன் அர்த்தமல்ல. வேதாகமம் வளர்ந்து வரும் ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைக் குறிக்கிறது. இறையியலாளர்கள் பெரும்பாலும் வேதாகம விசுவாசத்தின் வளர்ச்சிகள் இயற்கையானது என்று விவரிக்கிறார்கள்- அதாவது இது ஒரு விதையிலிருந்து ஒரு மரம் வளர்ந்து முதிர்ச்சியடைந்ததைப் போன்றது. நீங்கள் இதைப் பற்றி யோசித்துப் பார்த்தால், ஒரு விதை அதிலிருந்து வளரும் முதிர்ந்த மரத்திலிருந்து மிகவும் வித்தியாசமாகத் தெரிகிறது. வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் வேறுபாடுகள் உள்ளன. ஆனால் அது ஒரு உயிரினமாக, ஒரு தாவரமாகவே உள்ளது. அதே வழியில், பழைய ஏற்பாட்டின் பிற்பகுதிகள் முந்தைய பகுதிகளிலிருந்து வேறுபட்டவையாக இருக்கின்றன. மேலும் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டிலிருந்து வேறுபட்டது. ஆனால் இந்த வேறுபாடுகள் இயற்கையான வளர்ச்சியை பிரதிபலிக்கின்றன. நம் விசுவாசம் நீண்ட காலத்திற்கு முன்பு விதைக்கப்பட்ட ஒரு விதையிலிருந்து வளர்ந்தது, பழைய ஏற்பாடு முழுவதும் வளர்ச்சியடைந்து புதிய ஏற்பாட்டில் முழு முதிர்ச்சி அடைந்தது.

> தேவன் தன்னை படிப்படியாகவே வெளிப்படுத்துகிறார். தேவனைப் பற்றிய கோட்பாடுகள் மற்றும் கருப்பொருள்கள் மற்றும் கருத்துக்கள் விதையிலிருந்து முழு வடிவத்திற்கு வளரும் ”இயற்கையான வளர்ச்சி” என்று வேதாகமம் இதைக் காட்டுகிறது, எனவே வேதாகமம் அதன் சொந்த முற்போக்கான செய்தியைப் பற்றி பேசுகிறது. அதனால், உண்மையில், வேதாகமத்திற்குள்ளும், பஞ்சாகமங்களுக்குள்ளும் ஒரு வகையான வளர்ச்சி உள்ளது. இது தேவனுடைய வெளிப்பாட்டின் தொடக்கத்தில் இருந்து முழு மலரும் மலர்கிற வரையிலான ஒரு இயக்கம் ஆகும், அதாவது, ஒரு பூ படிப்படியாக மலரும் புகைப்படத்தை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதைப் போன்றது.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

நவீன பயன்பாட்டு சவால்களை எதிர்கொள்ள, நாம் பழைய ஏற்பாட்டின் பண்டைய உலகம் மற்றும் வேதாகமத்தில் நடந்த வரலாற்று வளர்ச்சிகளில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. பழைய ஏற்பாட்டை நம் உலகத்தை மனதில் கொண்டு எழுத தேவன் அன்றைய எழுத்தாளர்களை ஏவினார் என்பதிலும் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

## நம் உலகம்

1 கொரிந்தியர் 10:11 இல் பவுல் கூறியது போல், பழைய ஏற்பாடு “நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது”. இந்த உண்மை நவீன



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உலகில் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக நமக்கு இருக்கும் பொறுப்புகளை அங்கீகரிக்க நம்மைத் தூண்டுகிறது.

இன்றைய நாளில் நாம் பழைய ஏற்பாட்டை திறம்பட செயல்முறைப்படுத்தப் போகிறோம் என்றால், பின்வரும் கேள்விகளை நாம் எப்போதும் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும்: பழைய ஏற்பாட்டுப் பகுதியின் உண்மையான அர்த்தம் நம் உலகத்திற்கு எவ்வாறு பொருந்தும்? நாம் எந்த வகையான மனிதர்கள் என்று இது சித்தரிக்கிறது மற்றும் நாம் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளை இது எவ்வாறு சித்தரிக்கிறது? நமது பலவீனங்கள் மற்றும் பலம் என்ன? இந்த வகையான கேள்விகள் இன்று பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்துவதற்கான செயல்முறைக்கு முக்கியமானவையாக இருக்கின்றன.

இவைகளின் பயன்பாட்டைக் குறித்த சவால்களை மனதில் கொண்டு, பழைய ஏற்பாட்டுப் பகுதியின் பழமையான, உண்மையான அர்த்தத்தை எடுத்து, அதை நமது சமகால உலகிற்குப் பயன்படுத்துவதை சாத்தியமாக்கும் தொடர்புகள் எவை? என்ற இதற்கு நெருங்கிய தொடர்புடைய இரண்டாவது சிக்கலைப் பற்றிப் பார்க்கலாம்.

## தொடர்புகள்

பல வழிகளில், பழைய ஏற்பாட்டின் நவீன பயன்பாடு, பண்டைய உலகத்திலிருந்து ஒரு கலைப்பொருளை எடுத்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அதை எடுத்துச் சென்று, இன்று நம் உலகத்திற்கு அது எப்படி பொருந்துகிறது என்பதை வெளிப்படுத்துவது போன்றதாகும். இதைப் பற்றி நீங்கள் நினைக்கும் போது, அது ஒரு பயணமாக இருக்கிறது. இது சாத்தியம் என்று நம்மை எது நினைக்க வைக்கிறது? நாம் எப்படி வெற்றிபெற முடியும்? சரி, எந்தவொரு பண்டைய புத்தகமும் ஒரு நவீன நபரின் மீது தாக்கத்தை ஏற்படுத்த, அந்த புத்தகத்தின் உள்ளடக்கத்திற்கும் அதன் வாசகருக்கும் இடையே சிறிது தொடர்பு இருக்க வேண்டும். முற்றிலும் எந்த தொடர்புகளும் இல்லை என்றால், நாம் அதை புரிந்து கொள்ள மாட்டோம், மேலும் நாம் அதை நிராகரிப்போம். பழைய ஏற்பாட்டையும் நாம் கையாளும் போது இதைத் தான் நாம் பின்பற்ற வேண்டும். பழைய ஏற்பாட்டு காலத்திற்கும் நமது நாளுக்கும் இடையே உள்ள தூரத்தை விரிவுபடுத்தும் தொடர்புகள் அல்லது பொதுவான தன்மைகளை நாம் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த தொடர்புகளை பட்டியலிட பல வழிகள் உள்ளன, ஆனால் மூன்று பொதுவான அம்சங்களை முன்னிலைப்படுத்த இது உதவியாக இருக்கும். இந்த வேதாகமத்தை முதன்முதலில் பெற்ற பண்டைய இஸ்ரவேலர்களுக்கு இருந்ததைப் போன்ற அதே தேவன் நமக்கும் இருக்கிறார்; அவர்கள் வாழ்ந்த அதே உலகில் நாமும் வாழ்கிறோம்; மற்றும் நாமும் ஒரே வகையான மக்கள் தான். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களின் தேவன் பழைய ஏற்பாட்டில் நாம்

சந்திக்கும் அதே தேவன் என்பதில் தொடங்கி, இந்த தொடர்புகளைப் பற்றிப் பாரப்ோம்.

## அதே தேவன்

நாம் பார்த்தபடி, நமது நவீன உலகத்திற்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி உள்ளது. ஆனால் இன்றியமையாத சத்தியங்கள் மாறாமல் அப்படியே இருக்கின்றன - அதாவது நாம் யார், நாம் வாழும் உலகம் மற்றும் நாம் சேவை செய்யும் தேவன் ஆகியவை மாறாமல் அப்படியே இருக்கின்றன. உண்மையுள்ள பூர்வ இஸ்ரவேலர்கள் பழைய ஏற்பாட்டில் எவ்வாறு சேவை செய்தார்களோ அதே தேவனையே இன்று விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் ஆராதித்து சேவிக்கிறார்கள். தேவன் மாறாதவர் என்று வேதம் கற்பிக்கிறது என்பதால் இந்த உண்மை மிக முக்கியமான தொடர்புகளை நிறுவுகிறது. பண்டைய காலத்தில் இருந்த அதே தேவன் இன்றும் இருக்கிறார். இப்போது நாம் இந்த இடத்தில் கவனமாக இருக்க வேண்டும். மாறாத தன்மை என்பதன் அர்த்தம் தேவன் அசையாதவர் என்பதல்ல. அவர் வரலாற்றில் இருந்து விலகிவிட்டார் என்பது இதன் அர்த்தமில்லை.

***நித்திய ஆலோசகர்.*** தேவன் மாறாத ஒரே தேவன் என்பதற்கு மூன்று முக்கிய வழிகள் உள்ளன என்பதை பாரம்பரிய கிறிஸ்தவ இறையியலாளர்கள் சரியாகக் கற்பித்துள்ளனர். அவர் தனது நித்திய ஆலோசனையிலும், அவருடைய தெய்வீக பண்புகளிலும், அவருடைய உடன்படிக்கை வாக்குத்தத்தங்களிலும் மாறமாட்டார். இந்த வழிகள் ஒவ்வொன்றையும் பார்ப்போம், மேலும் பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவன் இருந்ததைப் போலவே இப்போதும் அவர் இருக்கிறார் என்பதை அவை எவ்வாறு உறுதி செய்கின்றன என்பதையும் பார்ப்போம். முதலாவதாக, தேவனுடைய நித்திய ஆலோசனை - அதாவது பிரபஞ்சத்திற்கான அவரது நித்திய திட்டம் - மாறாதது.

> உலகில் ஏதாவது நடக்கும் போதெல்லாம், இது உண்மையில் தேவனுடைய மனதில் இருந்ததா இல்லையா? என்று மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். குறிப்பாக உலகில் விஷயங்கள் தவறாக நடக்கும்போது தேவன் எங்கே இருக்கிறார், அவருடைய நோக்கம் என்ன? என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். தேவனின் சர்வாதிகாரத்துவத்தைப் பற்றிய வேதாகமக் கோட்பாட்டின் முழுமையை புரிந்துகொள்வது நமக்கு உதவியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன், ஏனென்றால் தேவனுடைய இறுதி விருப்பம் மற்றும் நோக்கத்திற்கு வெளியே எதுவும் நடக்காது என்பது தெளிவாகிறது. வேதத்தில் நாம் சுட்டிக்காட்டக்கூடிய இடங்கள் நிறைய உள்ளன. எபேசியர் 1 நிச்சயமாக அவைகளில்

> ஒன்றாகும், இது தேவன் தனது சித்தத்தினுடைய நோக்கத்தின்படி எல்லாவற்றையும் செய்கிறார் என்று கூறுகிறது. எனவே, வரலாற்றில் இதுவரை நடந்த அனைத்தும் தேவனுடைய நோக்கங்களின் ஒரு பகுதியாகும்… தேவனிடம் நோக்கம் உள்ளது - இது நமது வரையறுக்கப்பட்ட மனதுக்கு எட்டாத ஒரு பெரிய இரகசியமாகும் - தேவன், மனித வரலாற்றின் மூலம் செயல்படும் ஒரு நோக்கத்தை கொண்டுள்ளார்.
>
> – Dr. பிலிப் ரைகென்

ஏசாயா தீர்க்கதரிசி ஏசாயா 46:10 இல் கூறியது போல்:

> ”அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று [தேவன்] சொல்கிறார் (ஏசாயா 46:10).

இந்த வேத பகுதியில் உள்ளது போல், தேவன் செய்த மற்றும் செய்யும் அனைத்தும் அவரது சிருஷ்டிப்பிற்கு முன் நிறுவப்பட்ட மாறாத, விரிவான வடிவமைப்பின் ஒரு பகுதியாகும் என்று வேதம் கற்பிக்கிறது.

இந்தப் பாடங்களில், இந்த நித்தியத் திட்டத்தின் இலக்கையும் திசையையும் நாம் விரிவாக ஆராய்வோம், குறிப்பாக பரலோகத்தில் இருப்பதைப் போலவே பூமிக்கு தம்முடைய ராஜ்யத்தைக் கொண்டு வரும் திட்டத்தை  ஆராய்வோம். ஆனால் இந்த கட்டத்தில், தேவனுடைய நித்திய திட்டத்தின் மாறாத தன்மை, அவருடைய பழைய ஏற்பாட்டு நோக்கங்கள் அவருடைய புதிய ஏற்பாட்டு நோக்கங்களுடன் ஒத்துப்போகின்றன என்பதை நமக்குக் கற்பிக்கிறது என்று சொல்லலாம். நாம் என்ன வேறுபாடுகளைக் கண்டாலும், இரண்டு ஏற்பாடுகளும் இரண்டு வெவ்வேறு திட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. இதில் எந்த திட்டமும் மற்றொன்றை மாற்றாது அல்லது மற்றொன்றுடன் முரண்படாது. மாறாக, பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்பது ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தின் கட்டங்கள் அல்லது படிகள் ஆகும், அவை வரலாற்றை எப்போதும் மாறாத ஒரு இலக்கை நோக்கி நகர்த்தும் - பூமியை தேவனுடைய ராஜ்யமாக மாற்றுவதே அந்த இலக்கு.

**தெய்வீக பண்புகள்.** இரண்டாவது இடத்தில், தேவன் தனது தெய்வீக பண்புகளில் ஒரே மாதிரயாக இருக்கிறார்- அவரது சாரத்தின் குணங்களில் ஒரே மாதிரியாக இருக்கிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவன் வரலாற்றில் ஈடுபடும் போது, அவர் தனது குணத்தின் வெவ்வேறு அம்சங்களை வெவ்வேறு நேரங்களில் வெளிப்படுத்துகிறார் என்பது நிச்சயமான காரியம். உதாரணமாக, சில சமயங்களில் அவர் தனது இரக்கத்தைக் காட்டுகிறார்; சில நேரங்களில் அவர் தனது கோபத்தை வெளிப்படுத்துகிறார். சில நேரங்களில் அவர் தனது மகா வல்லமையைக் காட்டுகிறார்; சில நேரங்களில் அவர் தன்னை கட்டுப்படுத்திக் கொள்கிறார். ஆனால் அவரது நித்திய குணம் மாறாது. எபிரெயர் 1:10-12 இல் கிறிஸ்துவின் நித்திய இயல்பைப் பற்றி எபிரெய நிருபத்தின் ஆசிரியர் கூறிய விதத்தைக் கவனியுங்கள்:

> கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது;அவைகள் அழிந்துபோம்; நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போலப் பழைமையாய்ப்போம். ஒரு சால்வையைப்போல அவைகளைச் சுருட்டுவீர், அப்பொழுது மாறிப்போம்; நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்றும் சொல்லியிருக்கிறது (எபிரெயர் 1:10-12).

யாக்கோபு 1:17 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை (யாக்கோபு 1:17).

இங்கு யாக்கோபு கூறியது போல், நம் தேவன் மாறுவதில்லை.

துரதிர்ஷ்டவசமாக, பல நல்ல கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு இருந்த குணாதிசயங்களை விட வித்தியாசமான குணாதிசயங்கள் புதிய ஏற்பாட்டில் இருப்பதாகவும் அடிக்கடி பேசுகிறார்கள். ஆறு வயது சிறுவனாக, எரிகோவில் யோசுவாவின் யுத்தத்தைப் பற்றி என் ஆசிரியர் கூறியது எனக்கு நினைவிருக்கிறது. அவர் எங்களிடம் கதையைச் சொல்லி முடித்ததும், எங்களைப் பார்த்து, “சிறுவர் மற்றும் சிறுமிகளே , பழைய ஏற்பாட்டில் தேவன் மிகவும் மோசமானவராக இருந்தார். அப்போது பிள்ளைகள் சாக வேண்டும் என்றும் அவர் விரும்பினார். ஆனால் தேவன் இப்போது மாறிவிட்டார். புதிய ஏற்பாட்டில் அவர் அனைவரையும் நேசிக்கிறார். நீங்கள் பழைய ஏற்பாட்டில் வாழாமல் புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழகிறதைக் குறித்து உங்களுக்கு மகிழ்ச்சி இல்லையா?” நிச்சயமாக, நாம் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். நம்மில் யாருக்கும் எரிகோவின் குழந்தைகளைப் போல மரிக்க விருப்பமில்லை என்று கூறினார்.

இதைக் குறித்து என் ஆசிரியைக்கு மிகக் கடுமையான தவறான புரிதல் இருந்தது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையில் தேவனுடைய பண்புகளில் எந்த மாற்றமும் நிகழவில்லை. மாறாக, அவர் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் நியாயத்தீர்ப்பின் தேவனாகிய இருக்கிறார். மாறாக, அவர் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அன்பின் தேவனாக இருக்கிறார். தேவனுடைய குணங்கள் நித்தியமானவை. அவை எப்போதும் மாறாமல் இருந்திருக்கின்றன, மேலும் எப்போதும் மாறாமல் இருக்கும்.

தேவனுடைய பண்புகளின் மாறாத தன்மை, வரலாற்றின் எல்லா காலகட்டங்களிலும் நாம் எதிர்பார்க்க வேண்டிய தொடர்புகளை வெளிப்படுத்துகிறது. தேவனுடைய குணங்கள் கொஞ்சமும் மாறவில்லை. எனவே, பழைய ஏற்பாட்டுக் காலங்களிலும், புதிய ஏற்பாட்டுக் காலங்களிலும், நமது நாளிலும் அவருடைய செயல்களும் வெளிப்பாடுகளும் அவருடைய நித்திய இயல்பைத் தொடர்ந்து பிரதிபலிக்கின்றன என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். இன்றும் நாம் ஆராதிக்கும் அதே தேவனாக அவர் எப்போதும் இருந்து வருகிறார்.

**உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள்.** மூன்றாவது இடத்தில், தேவன் தனது உடன்படிக்கை வாக்குத்தத்தங்களில் அதே தேவனாக இருக்கிறார். தேவன் தம்முடைய மக்களுடன் செய்த உடன்படிக்கையின் மூலம் தாம் வாக்குத்தத்தம் செய்த அனைத்தையும் தவறாமல் நிறைவேற்றுவார்.

இப்போது நாம் இந்த இடத்தில் கவனமாக இருக்க வேண்டும். வேதாகமத்தில் பல முறை, தேவன் மக்களை அச்சுறுத்தி நிறைவேற்றாத விஷயங்களை மக்களுக்கு வழங்குகிறார். ஆனால் அச்சுறுத்தல்கள் மற்றும் சலுகைகள் உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள் அல்ல. உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள் தேவன் சத்தியம் செய்த காரியங்கள் ஆகும், மேலும் இந்த உடன்படிக்கை உறுதிமொழிகள் தவறாது. எபிரெயர் 6:17 இல் இவ்வாறு வாசிக்க முடியும்:

> அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஒர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார் (எபிரெயர் 6:17).

அதனால்தான் இந்த தொடரில் தேவனுடைய உடன்படிக்கைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. முழு பழைய ஏற்பாட்டின் போதனைகளும் புதிய ஏற்பாட்டின் போதனைகளும் ஒன்றாக உள்ளன, ஏனெனில் தேவன் தனது ராஜ்ய நோக்கங்களை தொடர்ச்சியான முக்கிய உடன்படிக்கைகளின் மூலம்

நிறைவேற்றுகிறார். ஒவ்வொரு உடன்படிக்கையும் முந்தைய உடன்படிக்கைகள் மீது கட்டப்பட்டு முந்தைய உடன்படிக்கைகளை விரிவுபடுத்துகிறது.

முதலாவதாக, தேவனுடைய ராஜ்யத்தின் இலக்குகளையும் மனிதர்களின் பங்கையும் நிறுவி, ஆதாமின் நாட்களில் தேவன் ஒரு உடன்படிக்கை செய்தார். நோவாவின் நாட்களில், தேவன் இந்த உடன்படிக்கையை கட்டியெழுப்பினார், மேலும் அதனுடைய இயல்பின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தினார். ஆபிரகாமின் நாளில், இஸ்ரவேல் பெருகும் என்றும், தேவனுடைய ஆசீர்வாதங்களை உலகம் முழுவதும் பரப்பும் என்றும் தேவன் வாக்குத்தத்தம் அளித்தார். மோசேயுடன் செய்த உடன்படிக்கையில், தேவன் தனது பிரமாணத்தை இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு முன் வைத்தார். தாவீதின் நாட்களில், அவர் இஸ்ரவேலை ஒரு ராஜ்யமாக நிறுவினார் மற்றும் தாவீதின் சந்ததி சிங்காசனத்தில் அமர்ந்து என்றென்றும் ஆட்சி செய்வார் என்பதை வலியுறுத்தினார். இறுதியாக, தேவன் கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கையை செய்து, கடந்த காலத்தின் தோல்விகளை மாற்றியமைத்து, அவருடைய ராஜ்ய நோக்கங்களை நிறைவேற்றினார். நிச்சயமாக, தேவன் இந்த ஒவ்வொரு உடன்படிக்கையிலும் வெவ்வேறு ராஜ்யக் கொள்கைகளை வலியுறுத்தினார், அவருடைய புரிந்துகொள்ள முடியாத ஞானத்தில் இவை பொருத்தமாக இருப்பதைக் கண்டார். ஆனால் இந்த ஒவ்வொரு உடன்படிக்கையிலும் அவர் செய்த ஒவ்வொரு வாக்குத்தத்தமும் நிறைவேற்றப்படும், ஏனென்றால் அவருடைய உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள் மாறாதவைகளாக இருக்கின்றன.

தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களில் சிலவற்றை மறந்துவிட்டாரோ அல்லது ஒதுக்கி வைத்து விட்டாரோ என்று அவ்வப்போது தோன்றுகிறது என்பதை நாம் அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் உண்மை என்னவென்றால், தேவன் மாறவில்லை என்பதை நினைவில் வைத்துக் கொண்டு நாம் வேதத்தை சரியாகப் புரிந்து கொள்ளும்போது, ஒவ்வொரு உடன்படிக்கை வாக்குத்தத்தமும் நிறைவேறும் என்பதைக் காண்கிறோம். தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை யாரும் எதிர்பார்க்காத வழிகளில் நிறைவேற்றலாம், ஆனால் அவர் அவற்றை உறுதியாக நிறைவேற்றுவார். மேலும் தேவன் பழைய ஏற்பாட்டிலும் இன்று போல அதே மாறாத தேவனாக இருப்பதால், அவருடைய உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள் பழைய ஏற்பாட்டின் பண்டைய போதனைகளுடன் நம்மை இணைக்கின்றன.

பழைய ஏற்பாடும் இன்றைய நமது விசுவாசமும் ஒரே மாறாத தேவனைக் கொண்டிருப்பதன் மூலம் இணைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். இப்போது, பழைய ஏற்பாட்டின் விசுவாசத்திற்கும் இன்றைய கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் இடையே உள்ள இரண்டாவது வகையான தொடர்பை நோக்கி நாம் திரும்ப வேண்டும் - அதாவது நாம் ஒரே உலகில் தான் வாழ்கிறோம் என்பதைப் பார்க்கப் போகிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## அதே உலகம்

நாம் முன்பே குறிப்பிட்டது போல், நமது நாளுக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளில் கவனம் செலுத்துவது எளிது. ஆனால், பண்டைய இஸ்ரவேலின் காலத்திலிருந்து நிறைய மாறியிருந்தாலும், நாம் இன்னும் அதே உலகில் தான் வாழ்கிறோம். பழைய ஏற்பாடு, நம்முடைய உலகத்திலிருந்து அடிப்படையில் வேறுபட்ட வேறொரு பிரபஞ்சத்திற்காக எழுதப்பட்டது என்று நாம் ஒருபோதும் நினைக்க அனுமதிக்கக்கூடாது. நீங்களும் நானும் இன்று வாழும் அதே உலகமே பழைய ஏற்பாட்டின் உலகம் ஆகும். பழைய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கும் நமக்கும் ஒரு பொதுவான வரலாறு மற்றும் பொதுவான சூழ்நிலைகள் தான் இருக்கின்றன.

**வரலாற்றுப் பின்னணிகள்.** பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் நம்மைப் போலவே அதே உலகில் வாழ்ந்தார்கள் என்பது நமது புதிய ஏற்பாட்டு விசுவாசத்திற்கும் பழைய ஏற்பாட்டின் விசுவாசத்திற்கும் இடையே குறைந்தபட்சம் இரண்டு வகையான தொடர்புகளை நிறுவுகிறது. முதலாவதாக, பழைய ஏற்பாடு நமது தற்போதைய அனுபவங்கள் பலவற்றை விளக்கும் வரலாற்றுப் பின்னணியை வழங்குகிறது. இரண்டாவதாக, பழைய ஏற்பாடு நமது தற்போதைய அனுபவங்களில் பலவற்றை *பிரதிபலிக்கும்* இணையான சூழ்நிலைகளை விவரிக்கிறது. நம்முடைய விசுவாச அனுபவங்களுக்கு பழைய ஏற்பாடு வரலாற்றுப் பின்னணியை வழங்குகிறது என்று நாம் கூறுவதன் அர்த்தம் என்ன என்பதை ஆராய்வோம்.

புதிய ஏற்பாட்டிலும் இன்றைய உலகத்திலும் உள்ள நிகழ்வுகள் மற்றும் போதனைகளுக்கு பின்னணியை வழங்குவது, பழைய ஏற்பாட்டின் மிகத் தெளிவான, மற்றும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும்,. பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் வெற்றிடத்தில் நிகழவில்லை. அவை கற்பனையானவை அல்ல. அவை உண்மையான வரலாற்றில் நடந்தன, மேலும் அவைகளில் பல உலகில் எப்போதும் நிலைத்திருக்கும் அடையாளங்களை விட்டுச் சென்றன.

உதாரணமாக, சீனாய் மலையில் இஸ்ரவேலுக்குக் கொடுக்கப்பட்ட பத்துக் கட்டளைகள் புதிய ஏற்பாட்டின் தார்மீக போதனைக்கு ஒரு நிலையான பின்னணியை நிறுவின. இன்று உலகெங்கிலும் உள்ள நினைவுச்சின்னங்கள் மற்றும் நெறிமுறை போதனைகளில் பத்து கட்டளைகளின் தாக்கத்தை நம்மால் காணமுடியும். இதேபோல், தேவனுடைய மக்களுக்கான நிரந்தர வம்சத்தின் தலைவராக தாவீதை தேவன் தேர்ந்தெடுத்தது, தாவீதின் பெரிய குமாரனாக இயேசுவின் வம்சவரலாற்றிற்கு வரலாற்று விளக்கத்தை அளித்தது. நிச்சயமாக, தாவீதின் குமாரனாக, எல்லாவற்றிற்கும் மேலான ராஜாவாக, நமக்கு இரட்சிப்பைத் தரக்கூடிய ஒரே ஒருவராக இயேசு இருக்கிறார். இது போன்ற எண்ணற்ற மற்ற வழிகளில், பழைய ஏற்பாடு நமது நாளுக்கான வரலாற்று பின்னணியை வழங்குகிறது.

**இணையான சூழ்நிலைகள்.** இரண்டாவது இடத்தில், நாம் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளுடன் ஒரே உலகத்தைப் பகிர்ந்து கொள்கிறோம் என்பதை அறிவோம், ஏனெனில், நமது அனுபவங்களின் வரலாற்றுப் பின்னணியை மட்டும் நாம் அங்கீகரிக்கவில்லை, ஆனால் பழைய ஏற்பாட்டிற்கும் நமது நாளுக்கும் இடையில் பல இணையான சூழ்நிலைகள் இருப்பதையும் நாம் காண்கிறோம்.

பழைய ஏற்பாட்டு விசுவாசிகளைப் போலவே, நாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகில் வாழ்கிறோம், ஆனால் பாவத்தில் விழுந்தோம். பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த உண்மையான விசுவாசிகள் மற்றவர்களிடமிருந்தும் பிசாசுகளிடமிருந்தும் எதிர்ப்பை எதிர்கொண்டனர், இன்றும் நாம் அதே எதிர்ப்பை எதிர்கொள்கிறோம். பழைய ஏற்பாட்டில், மக்கள் ஒரு காரியத்தை மேற்கொள்ள தேவனுடைய உதவியை சார்ந்திருந்தனர். நாமும் அவருடைய உதவியை சார்ந்திருக்கிறோம். இந்த வகையான இணைகள் விரிவானவை. மேலோட்டமான வேறுபாடுகளுக்கு அப்பால் நாம் பார்த்தால், பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் மற்றும் அவர்களுடைய வாசகர்களின் சூழ்நிலைகளைப் போலவே நம்முடைய சூழ்நிலைகளும் இருப்பதைக் காணலாம்.

முந்தைய நிகழ்வுகள் மற்றும் பிற்கால நிகழ்வுகளின் ஒரு தொகுப்பிற்கு இடையே உள்ள ஒற்றுமையை அது எவ்வாறு சுட்டிக்காட்டுகிறது என்பதுதான் வேதாகமத்தின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். எகிப்திலிருந்து இஸ்ரவேல் வெளியேறியதை இஸ்ரவேல் சிறையிருப்பில் இருந்து திரும்பியதுடன் தீர்க்கதரிசிகள் இணைத்தனர். சுவிசேஷங்கள் இயேசுவின் வாழ்க்கையை எகிப்தில் இருந்து இஸ்ரவேல் வெளியேற்றியதுடன் ஒன்றுபடுத்திப் பார்த்தன. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி இஸ்ரவேலர் அணிவகுத்துச் சென்றதற்கும் கிறிஸ்துவைப் பின்பற்றி புதிய வானங்கள் மற்றும் பூமியை நோக்கிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கைக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளை அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டினார். மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை உயர்த்தியதற்கும், அவர் சிலுவையில் எப்படி உயர்த்தப்படுவார் என்பதற்கும் உள்ள ஒற்றுமைகளை இயேசு குறிப்பிட்டார். இந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இறையியலாளர்கள் பெரும்பாலும் இந்த இணைகளை ”வேதாகம வகைமையியல்” என்று அழைக்கிறார்கள். வேதாகம வகைமையியல்கள் முந்தைய சூழ்நிலைகளுக்கு இணையாக பிந்தைய சூழ்நிலைகள் இருக்கின்றன என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டவை. பழைய ஏற்பாட்டில் உள்ள தேவனுடைய மக்கள் வாழ்ந்த அதே உலகில் நாம் இன்னும் வாழ்கிறோம் என்பதால், இந்த இணைகள் பெருமளவில் உள்ளன.

ஒரே தேவனையும் ஒரே உலகத்தையும் கொண்டிருக்கிறோம், அதுமட்டுமல்ல மக்களும் ஒரே மாதிரியானவர்கள் என்பதன் அடிப்படையில்

பழைய ஏற்பாட்டிற்கும் நமது நாளுக்கும் இடையே உள்ள தொடர்புகளையும் நாம் காணலாம்.

## அதே மக்கள்

பழைய ஏற்பாட்டின் பண்டைய மக்களுக்கும் நவீன மனிதர்களுக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. ஆனால் நாம் அனைவரும் ஒரே மாதிரியான மனிதர்கள் என்று வேதம் போதிக்கிறது. காலத்திலும் கலாச்சாரத்திலும் கூட, நம்முடைய வேறுபாடுகளுக்கு அடிப்படை மற்றும், நம்மை ஒன்றிணைக்கும் முக்கியமான தொடர்ச்சிகளால் நாம் இணைக்கப்பட்டுள்ளோம்.

***தேவனுடைய சாயல்.*** பழைய ஏற்பாட்டில் உள்ள மக்களைப் போலவே நாமும் ஒரே மாதிரியான மக்களாக இருக்க குறைந்தபட்சம் மூன்று வழிகள் உள்ளன. எல்லா மனிதர்களும் தேவனுடைய சாயல் தான்; நாம் அனைவரும் பாவமுள்ளவர்கள்; எல்லா மக்களும் தேவனுடன் உடன்படிக்கையில் உள்ளனர். முதலாவதாக, எல்லா மனிதர்களும், அவர்கள் எப்போது அல்லது எங்கு வாழ்ந்தாலும், தேவனுடைய சாயலாகவே இருக்கின்றனர். இது பழைய மற்றும் புதிய ஏற்பாடு முழுவதிலும் உள்ள தெளிவான போதனையாகும்.

ஆதியாகமம் 1:27 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:27).

ஆதியாகமம் 9:6 இல் பாவம் மனிதகுலத்தைக் கெடுத்த பிறகும், மனிதர்கள் இன்னும் தேவனுடைய சாயலாக தொடர்வதைைக் காண்கிறோம். இங்கே நாம் இப்படி வாசிக்கிறோம்:

> மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது (ஆதியாகமம் 9:6).

இதைத் தாண்டி, எல்லா மக்களும் தேவனுடைய உருவம் அல்லது சாயல் என்பதை புதிய ஏற்பாடு உறுதிப்படுத்துகிறது. யாக்கோபு 3:9 இவ்வாறு கூறுகிறது:

> அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம் (யாக்கோபு 3:9).

1 கொரிந்தியர் 11:7 இல் பவுல் பின்வருமாறு சொல்கிறார்:

> புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான் (1 கொரிந்தியர் 11:7).

> தேவன், ஆணையும் பெண்ணையும் தமது சாயலில் சிருஷ்டித்ததே, நாம் பொதுவாகப் பகிர்ந்துகொள்ளும் ஒரு விஷயம் என்பதைக் காண்கிறோம்… பழைய ஏற்பாட்டில் இருந்த அனைவரும், அதாவது முதல் ஆணும் பெண்ணுமான ஆதாம் மற்றும் ஏவாளும் இதில் அடங்குவர். அதனால் அது நம்மை விட்டு போகவில்லை, அது ஒரு அடிப்படையான ஒன்று … நமக்கு முன் சென்ற அனைத்து பரிசுத்தவான்களுக்கும், நமக்கு முன் சென்ற அனைத்து மக்களுக்கும் இது பொதுவானதாகும்.
>
> – Rev. திமொத்தி மௌண்போர்ட்

தேவனுடைய சாயலாக நமது பங்கைப் புரிந்துகொள்வது, வரலாறு முழுவதும் தேவனுடைய ராஜ்ய நோக்கங்களைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமானது. தேவனுடைய சாயல் என்றால் என்ன என்பதைப் பற்றி அடுத்த பாடத்தில் இன்னும் நிறைய சொல்ல வேண்டும். ஆனால், இந்த கட்டத்தில், பல பகிரப்பட்ட குணாதிசயங்கள் மனிதர்களை வகைப்படுத்துகின்றன என்று சொன்னால் அது போதுமானது. மனிதர்கள் பகுத்தறிவுள்ளவர்கள், அவர்களுக்கு விசேஷித்த மொழியியல் திறன்கள் உள்ளன மற்றும் அவர்கள் ஒழுக்கம் சார்ந்த அல்லது தேவபக்தியுள்ள சிருஷ்டிகள் என்கிற உண்மையில் சபை கடந்த காலங்களில் கவனம் செலுத்தியது.

எல்லா மக்களும் தேவனுடைய சாயலில் இருப்பதை பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன என்கிற உண்மை பழைய ஏற்பாட்டு கால மக்களுக்கும் நவீன மக்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை மிகைப்படுத்தி மதிப்பிட வேண்டாம் என்று எச்சரிக்கிறது. நிச்சயமாக, நாம் அனைவரும் பல வழிகளில் வித்தியாசமாக இருக்கிறோம், ஆனால் இன்று வாழும் நாம் பண்டைய மக்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் அல்ல. நாம் சரியாக அவர்களைப் போல் இல்லை என்றாலும், அவர்களின் வாழ்க்கையில் இருந்த குணாதிசயங்களான பகுத்தறிவு, மொழியியல் மற்றும் தார்மீக குணங்கள் நம்முடையவைகளாகவும் இருக்கின்றன என்று நாம் கருதலாம். நாம் நினைப்பது போலவே அவர்களும் நினைத்தார்கள். நாம் புரிந்துகொண்டதைப் போலவே அவர்களும் மொழியைப் புரிந்துகொண்டார்கள். நம்மைப் போலவே அவர்களுக்கும் தார்மீக மற்றும் நம்பிக்கையின் கேள்விகளுடன் போராட்டம் இருந்தது. இந்தக் காரணங்களுக்காக, பழைய ஏற்பாட்டை நம் வாழ்வில் பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கை நமக்கு வருகிறது. அதை முதலில் எழுதி அதை முதலில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பெற்றவர்கள் நம்மைப் போலவே தேவனுடைய சாயலை கொண்டவர்கள் ஆவார்கள்.

**பாவமுள்ளவர்கள்.** இரண்டாவது இடத்தில், எல்லா மனிதர்களும் பாவமுள்ளவர்கள் என்பதால் நாமும் பழைய ஏற்பாட்டு மனிதர்களைப் போலவே இருக்கிறோம்.

ரோமர் 3:12 இல் உள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள், அங்கு பவுல் சங்கீதங்களிலிருந்து ஒரு சில மேற்கோள்களை எடுத்து மக்களின் பாவ நிலையை விவரிக்கிறார். அங்கே அவர் இவ்வாறு எழுதினார்:

> எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை (ரோமர் 3:12).

எல்லா மக்களும் பாவம் செய்தார்கள் என்பதை அப்போஸ்தலன் தெளிவுபடுத்தினார். மேலும் இது ஒரு புதிய ஏற்பாட்டு போதனை மட்டுமல்ல. 1 இராஜாக்கள் 8:46 இல், சாலொமோன் ஆலய பிரதிஷ்டையின் போது அதே விஷயத்தை வெளிப்படுத்தினார்:

> பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே (1 இராஜா 8:46).

> முறைப்படுத்தப்பட்ட இறையியலில், "மொத்த சீரழிவு" என்று அழைக்கப்படும் இந்த போதனை உள்ளது. மேலும் இதன் பொருள் என்னவென்றால், மனிதனின் மொத்தமும், அதாவது அவனது எண்ணம், உணர்வு மற்றும் நடத்தை அனைத்தும் பாவத்தால் கறைபட்டுவிட்டன, அதனால் அவன் செய்யும் அனைத்தும் தேவனுடைய கட்டளைகளையும் பரிசுத்த தராதரங்களையும் மீறிச் செய்கிறான் என்ற அடிப்படை அனுமானம் உள்ளது. ஆம், பாவ சுபாவம் என்று ஒன்று இருக்கிறது.
>
> – Dr. லூயிஸ் ஆர்டெசா

நாம் பாவமுள்ளவர்களாகவும், தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டு பாவத்தில் விழுந்துபோனவர்களாகவும் இருப்பதால், பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் ஏன் பாவத்தின் மீது அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது கடினம் அல்ல. பழைய ஏற்பாட்டின் முதல் வாசகர்களைப் போலவே நாமும் பாவிகள் என்பதை நாம் அறிந்திருப்பதால், பழைய ஏற்பாட்டை இந்த மட்டத்தில் இணைக்கிறோம். பழைய ஏற்பாடு ஏன் பாவிகளை *மீட்பதில்* கவனம் செலுத்துகிறது என்பதையும் நாம் புரிந்துகொள்கிறோம். மனிதகுலம் பாவத்தில் விழுந்த காலத்திலிருந்து, எல்லா

மக்களுக்கும் மீட்பின் தேவை இருந்தது. இந்த உண்மை பழைய ஏற்பாட்டின் பண்டைய உலகத்துடன் நம்மை இணைக்கிறது.

**உடன்படிக்கை.** மூன்றாவது, நாம் ஒரே மாதிரியான மனிதர்களாக இருக்கிறோம், ஏனென்றால் பழைய ஏற்பாட்டு காலங்களில் வாழ்ந்த மக்களும், அன்றுக்கும் இன்றுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களும், இன்று வாழும் எல்லா மக்களும் உடன்படிக்கையால் தேவனுக்குக் கட்டுப்பட்டவர்கள்.

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் எல்லா மக்களும் உடன்படிக்கையால் தேவனுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று தொடர்ந்து பேசுகின்றன. ஆதாம் மற்றும் நோவாவுடன் தேவன் செய்த உடன்படிக்கைகள் "உலகளாவிய" உடன்படிக்கைகள் என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் அவை எல்லா மனிதர்களுடனும் செய்யப்பட்டன. இதை அடுத்த பாடத்தில் பார்ப்போம். இந்த உடன்படிக்கைகள் எல்லா மக்களும் தங்கள் இரக்கம் மற்றும் தயவுள்ள ராஜாவுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை கூறுகின்றன. பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகள் முதன்மையாக தேவன் இஸ்ரவேல் தேசத்துடன் செய்த விசேஷித்த உடன்படிக்கைகளில் கவனம் செலுத்துகின்றன, பெரும்பாலும் இவை "தேசிய" உடன்படிக்கைகள் என்று அழைக்கப்படுகின்றன. ஆபிரகாம், மோசே, தாவீது ஆகியோருடன் செய்த உடன்படிக்கைகளாலும், பின்னர் இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த புதிய உடன்படிக்கையாலும் இஸ்ரவேல் மக்கள் தேவனுக்குக் கட்டுப்பட்டனர். மேலும் இன்று நாம் அனைவரும் அதே நிலையில் தான் இருக்கிறோம். ஒவ்வொரு நபரும் ஆதாம் மற்றும் நோவாவுடன் செய்த உடன்படிக்கைகளால் தேவனுக்குக் கட்டுப்பட்டவர்கள். இன்று சபையானது பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் தேசத்துடனான அவரது விசேஷித்த உடன்படிக்கைகளாலும் கிறிஸ்துவில் இருக்கிற புதிய உடன்படிக்கையினாலும் தேவனுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. யாத்திராகமம் 19:6 இல், தேவன் சீனாய் மலையில் இஸ்ரவேலுடனான தனது விசேஷ உடன்படிக்கை உறவைப் பற்றி இவ்வாறு பேசியது உங்களுக்கு நினைவிருக்கும்:

> நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் (யாத்திராகமம் 19:6).

1 பேதுரு 2:9 இல் அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த வேத பகுதியை மேற்கோள் காட்டினார், ஆனால் அவர் அதை புதிய ஏற்பாட்டு சபையில் பயன்படுத்தினார். அவர் இவ்வாறு கூறுகிறார்:

> நீங்களோ தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், [தேவனுக்கு] சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இங்கே, பழைய ஏற்பாட்டில் தேவன் தனது விசேஷித்த உடன்படிக்கை மக்களான இஸ்ரவேலரிடம் பேசிய வார்த்தைகளை பேதுரு கிறிஸ்தவ சபையில் பயன்படுத்தினார். கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் இப்போது கிறிஸ்துவில் உள்ள புதிய உடன்படிக்கையால் தேவனோடு இணைந்திருப்பதால் அவர் இந்த வார்த்தைகளை பயன்படுத்தினார். இது வரலாறு முழுவதும் இயங்கும் ஒரு நிலையான இணைப்பாகும்.

பழைய ஏற்பாட்டை நம் வாழ்வில் செயல்முறைப் படுத்துவதில் நாம் கடக்க வேண்டிய சவால்களை இப்போது ஆராய்ந்து, பழைய ஏற்பாட்டிற்கும் நமக்கும்உள்ள தொடர்புகளை ஆராய்ந்தோம், பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்தப் போகிறோம் என்றால், நாம் புரிந்து கொள்ள வேண்டிய முன்னேற்றங்களில் நம் கவனத்தை செலுத்த வேண்டும்.

## முன்னேற்றங்கள்

நாம் முன்பு பார்த்தது போல், பழைய ஏற்பாட்டின் பயன்பாடு இன்று நம் வாழ்வில் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் வேதாகம நம்பிக்கையில் நடந்த பல வரலாற்று முன்னேற்றங்களுக்கு காரணமாக இருக்க வேண்டும். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு மற்றும் நமது கிறிஸ்தவ நம்பிக்கை இன்று ஒரே மதம் மற்றும் ஒரே நம்பிக்கையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இருந்தாலும், பல்வேறு வகையான முன்னேற்றங்கள் நடந்தன என்பதை நாம் எப்போதும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

இந்த முன்னேற்றங்களை விவரிக்க பல வழிகள் உள்ளன, ஆனால் நாம் மூன்று முக்கிய வகைகளை முன்னிலைப்படுத்துவோம்: சகாப்த முன்னேற்றங்கள், கலாச்சார முன்னேற்றங்கள் மற்றும் தனிப்பட்ட முன்னேற்றங்கள். முதலாவதாக, தேவன் தம்மையும் அவருடைய சித்தத்தையும் சகாப்தங்கள் அல்லது யுகங்களில் தனது மக்களுக்கு வெளிப்படுத்தினார்.

### சகாப்த முன்னேற்றங்கள்

வேதாகம வரலாறு என்பது கிறிஸ்துவில் தெய்வீகமாக நிர்ணயிக்கப்பட்ட முடிவை நோக்கி வரலாறு நகர்ந்தபோது, தேவன் தம்முடைய மக்களுக்கு தன்னை வெளிப்படுத்திய விதத்தின் நீண்ட விவரம் ஆகும். இந்த வரலாற்றை ஆராய்வதற்கு பல்வேறு வழிகள் உள்ளன, ஆனால், தேவன் தனது மக்களுடன் செய்த உடன்படிக்கைகளுக்கு ஒத்த முக்கிய காலங்கள் அல்லது சகாப்தங்களாகப் பிரிப்பதே ஒரு பயனுள்ள வழியாகும். இந்த உடன்படிக்கை காலங்கள் ஒவ்வொன்றிலும், தேவன் தன்னைப் பற்றி அதிகமாக வெளிப்படுத்தினார். எளிமையாகச் சொன்னால், தேவன் ஆதாமுக்கு வெளிப்படுத்தியதை விட நோவாவுக்கு அதிகமாக வெளிப்படுத்தினார். அவர் நோவாவுக்கு வெளிப்படுத்தியதை விட ஆபிரகாமுக்கு அதிகமாக வெளிப்படுத்தினார். ஆபிரகாமை விட மோசே அதிக வெளிப்பாட்டைப்

பெற்றார். மேலும் தேவன் தாவீதுக்கு மோசேயை விட அதிக வெளிப்பாட்டைக் கொடுத்தார். புதிய ஏற்பாட்டு யுகத்தில், தேவன் முன்பை விட அதிகமாக வெளிப்படுத்தியுள்ளார். எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் எபிரெயர் 1:1-2 ல் இந்தக் கருத்தை வலியுறுத்தினார்:

> பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார் (எபிரெயர் 1:1-2).

வேதாகம ஆசிரியர்களைப் போலவே, கிறிஸ்தவர்களும் வேதாகம வரலாற்றை வெவ்வேறு காலங்கள் அல்லது சகாப்தங்களாக வெவ்வேறு வழிகளில் பிரித்துள்ளனர். ஆனால் மொத்தத்தில், வேதாகம வரலாற்றில் மிகப் பெரிய சகாப்த வளர்ச்சி பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் நிகழ்ந்தது என்பதை கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்த சகாப்தப் பிரிவு இன்று தேவனுடைய வார்த்தையை செயல்முறைப்படுத்துவதற்கு முக்கியமானது. மேலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, “பழைய ஏற்பாட்டின் போதனைகள் புதிய ஏற்பாட்டு யூகத்திற்கு எவ்வாறு பொருந்தும்? என்கிற கேள்வியை கிறிஸ்தவர்கள் கேட்டுள்ளனர்.

பழைய ஏற்பாடு நமக்குப் பொருந்தும் என்று உண்மையான கிறிஸ்தவர்கள் சரியாக நம்புகிறார்கள், ஆனால் அதன் செய்தியை நம் காலத்தில் செயல்முறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு வெவ்வேறு வழிகள் உள்ளன. ஒரு பக்கத்தில் வேதாகம வரலாற்றின் ஒரு பகுதியான பார்வையை ஊக்குவிப்பவர்கள் உள்ளனர். இந்த கிறிஸ்தவர்கள் குறிப்பாக பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு காலங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை வலியுறுத்துகின்றனர். புதிய ஏற்பாட்டில் வெளிப்படையாக மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டு போதனைகளை நவீன விசுவாசிகளுக்கு மட்டுமே நாம் பயன்படுத்த வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். இல்லையெனில், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு பழைய ஏற்பாடு பொருந்தாது.

மறு பக்கத்தில் வேதாகம நம்பிக்கையின் தட்டையான பார்வையை ஊக்குவிக்கும் பல தீவிர நிலைகள் உள்ளன. இந்த கிறிஸ்தவர்கள் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு காலங்களின் *தொடர்ச்சியை* வலியுறுத்துகின்றனர். இந்த பார்வையானது, புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டு போதனையை வெளிப்படையாக நிராகரிக்காத அல்லது மாற்றியமைக்காத வரை, கிறிஸ்துவுக்கு முன் வாழ்ந்தவர்களைப் போல கிறிஸ்தவர்களும் அதைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளனர் என்று போதிக்கிறது.

இந்த பாடத்தில், வேதாகம நம்பிக்கையின் ”வளர்ச்சி பார்வை” என்று நாம் அழைப்பதை வலியுறுத்துவதன் மூலம் இந்த இரண்டு

உச்சநிலைகளையும் தவிர்ப்போம். இந்த பார்வையின் படி, பழைய ஏற்பாடு அனைத்தும் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பரிமாணமும் கிறிஸ்துவில் தேவன் செய்த கிரியையின் காரணமாக வளர்ந்திருக்கிறது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அனைத்து பழைய ஏற்பாட்டு போதனைகளும் கிறிஸ்தவர்களுக்கு பொருந்தும், ஆனால் எப்போதும் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் தான் அது பொருந்தும்.

> பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள தொடர்பு பல விவாதங்களுக்கு உட்பட்டது. அது உண்மையில் இன்றும் கூட நிறைய விவாதத்திற்குரிய கேள்வியாக இருக்கிறது. ”படிப்படியான வெளிப்பாடு” என்று நாம் அழைக்கும் இந்த வளர்ச்சியை அணுக விரும்பும் ஒரு வழி உள்ளது. தேவன் எல்லாவற்றையும் ஆரம்பத்தில் வெளிப்படுத்தவில்லை. இறையியல் முன்னேற்றத்தின் வரலாறும், புதிய ஏற்பாட்டு டன் தொடர்புடைய பழைய ஏற்பாட்டு போதனையின் வரலாறும், உண்மையில் தொடக்கத்தில் ஒரு பகுதியாக வெளிப்பட்ட வெளிப்பாடும் பின்னர் புதிய ஏற்பாட்டில் முழுமையாக வெளிப்பட்டதுமாயுமிருக்கிறது. சபை இறையியலின் யதார்த்தத்தை எழுதுவதில் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் போதனை புதிய ஏற்பாட்டில் ஒரு முழுமையான வெளிப்பாடு ஆகும்.
>
> – Dr. டேனியல் ஸ்டெபென்

கலாத்தியர் 3:24 இல் பவுல் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையிலான உறவைப் பற்றி இவ்வாறு பேசினார்:

> நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது (கலாத்தியர் 3:24).

இந்த வசனத்தில், ”உபாத்தியாய்” என்ற வார்த்தை கிரேக்க பெயர்ச்சொல் *paidagogos* (παιδαγωγός) ஐ மொழிபெயர்க்கிறது. ஒரு குழந்தை முதிர்ச்சியடையும் படிக்கு அதை அறிவுறுத்தி, வழிகாட்டி ஒழுங்குபடுத்தும் ஒரு ஆசிரியர் அல்லது பராமரிப்பாளரை இந்த வார்த்தை குறிக்கிறது. எனவே, பவுல் இங்கே குறிப்பிட்டது போல, பழைய ஏற்பாட்டு போதனைகள் ஒரு குழந்தைக்கு கொடுக்கப்பட்ட அறிவுரைகள் போல இருந்தன, ஆனால் புதிய ஏற்பாட்டு போதனைகள் வயதுவந்த வாரிசுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் போன்றவை.

”தெருவில் போகாதே.”, ”நெருப்பை தொடாதே.”போன்ற பாடங்களை பெற்றோர்கள் சிறு குழந்தைகளுக்கு கற்பிப்பதை நாம் அனைவரும் அறிவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால் குழந்தைகள் பெரியவர்களாகிவிட்டால், தெருவில் போக வேண்டாம் அல்லது நெருப்பைத் தொட வேண்டாம் என்று நாம் எச்சரிக்க மாட்டோம். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் இப்போது பெரியவர்கள். இருப்பினும், பெற்றோர்கள் தங்களின் முதிர்ந்த குழந்தைகள் தங்கள் குழந்தை பருவ விதிகளின் ஞானத்தை நினைவில் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். சாலைகள் மற்றும் நெருப்பு ஆபத்தானவை என்பதை முதிர்ந்தவர்கள் நினைவில் வைத்து அவற்றை கவனமாக அணுக வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். பெரியவர்களை சிறு குழந்தை போல் நடத்துவது முட்டாள்தனம். ஆனால் பெரியவர்கள் தங்கள் குழந்தைப் பருவத்திலிருந்து கற்றுக்கொண்டதை மறந்துவிடுவது முட்டாள்தனம்.

பல வழிகளில், பழைய ஏற்பாடு ஒரு குழந்தைக்கு கொடுக்கப்பட்ட விதிகளை ஒத்திருக்கிறது. பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் மக்கள் முதிர்ச்சியடையும் போது அவர்களின் ஆவிக்குரிய நிலைக்காக இது வடிவமைக்கப்பட்டது. புதிய ஏற்பாடு கிறிஸ்துவில் தேவனுடைய வெளிப்பாட்டிற்குப் பிறகு வாழ்பவர்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலாகும். புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம், பழைய ஏற்பாட்டு காலத்தில் இருந்தவர்களைப் போல் பழைய ஏற்பாட்டிற்குக் கீழ்ப்படிந்தால், கிறிஸ்துவின் முக்கியத்துவத்தை நாம் மறுக்கிறோம். ஆனால் பழைய ஏற்பாட்டில் கற்பிக்கப்பட்ட ஞானத்தை நாம் நிராகரித்தால், பழைய ஏற்பாட்டின் அதிகாரத்திற்கு கிறிஸ்து கொடுத்த கனத்தை நாம் மறுக்கிறோம் என்று அர்த்தம். கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாக, நாம் பழைய ஏற்பாட்டின் அதிகாரத்திற்கு அடிபணிய வேண்டும், ஆனால் யுகங்களின் நிறைவேறுதல் நம் மீது வந்துள்ளவர்களாக நாம் அவ்வாறு செய்ய வேண்டும்.

சகாப்த முன்னேற்றங்களுக்கு மேலதிகமாக, பழைய ஏற்பாட்டை நம் நாளில் பயன்படுத்த வேண்டுமானால், கலாச்சார முன்னேற்றங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## கலாச்சார முன்னேற்றம்

நாம் பழைய ஏற்பாட்டைப் படிக்கும்போது, பழைய ஏற்பாட்டில் வழங்கப்பட்ட கலாச்சார முறைகளுக்கும் நமது சொந்த உலகின் கலாச்சார முறைகளுக்கும் இடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நம் நாளில் உள்ள எந்த கலாச்சார அம்சங்கள் ஆபிரகாமின் நாளுக்கு இணையாக உள்ளன? நமது கலாச்சாரம் எப்படி தாவீதின் கலாச்சாரத்துடன் பொருந்துகிறது? பழைய ஏற்பாட்டின் பண்டைய நாட்களில் இருந்து மனித கலாச்சாரம் எவ்வாறு மாறிவிட்டது? எந்தெந்த பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் வேறுபட்டவையாக இருக்கின்றன? பழைய ஏற்பாட்டை பொறுப்பாக நவீன வாழ்க்கைக்கு நாம் பயன்படுத்த வேண்டுமானால், இந்தக் கேள்விகளுக்கு நாம் பதிலளிக்க வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நாம் 21 ஆம் நூற்றாண்டில் வாழ்கிறோம், நாம் கலாச்சாரத்திற்கும் பழைய ஏற்பாட்டின் கலாச்சாரத்திற்கும் வேறு பாடுகள் இருக்கிறதை நாம் காண்கிறோம். எனவே, நாம் உண்மையில் வேதாகம கலாச்சாரத்தை ஆழமாக தோண்டி எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது, இதன் மூலம் நாம் வேத பகுதியை சரியாக புரிந்து கொள்ள முடியும். எனவே, நாம் காரியங்களைச் செய்யும் விதம் பழைய ஏற்பாட்டிலிருந்து மிகவும் வித்தியாசமானதாக இருக்கிறது. எனவே, பழைய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய மக்களின் வாழ்க்கையில் என்ன செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள, பழைய ஏற்பாட்டின் சூழலையும் கலாச்சாரத்தையும் நாம் உண்மையில் பார்க்க வேண்டும்.
>
> – Dr. டேனியல் சிமாங்கோ

நாம் சகாப்த மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை மட்டும் கருத்தில் கொண்டால் போதாது, ஆனால் நம் நாளில் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்த, தனிப்பட்ட முன்னேற்றங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

## தனிப்பட்ட முன்னேற்றங்கள்

பழைய ஏற்பாட்டின் மக்களுக்கும் நமது சமகால உலகில் வாழும் மக்களுக்கும் இடையே கணிசமான ஒற்றுமைகள் மற்றும் கணிசமான வேறுபாடுகள் உள்ளன. பழைய ஏற்பாட்டின் பண்டைய வேத பகுதிகளை சரியாகப் பயன்படுத்த நாம் விரும்பினால், இதுபோன்ற கேள்விகளை நாம் கேட்க வேண்டும்: பழைய ஏற்பாட்டில் நாம் காணும் வாழ்க்கையுடன் நமது தனிப்பட்ட வாழ்க்கை எவ்வாறு ஒப்பிடப்படுகிறது? சமூகத்தில் நம்முடைய பாத்திரம் என்ன? அந்த பாத்திரங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ள கதாபாத்திரங்களுடன் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன? நமது ஆவிக்குரிய நிலை என்ன? நமது எண்ணங்கள், செயல்கள் மற்றும் உணர்வுகள் பழைய ஏற்பாட்டு காலத்தில் நாம் காணும் மக்களுடன் எவ்வாறு ஒப்பிடப்படுகின்றன? பண்டைய பழைய ஏற்பாட்டு மக்களுக்கும் நவீன மக்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை கணக்கில் எடுத்துக்கொள்வதன் மூலம், பழைய ஏற்பாட்டை நம் நாளில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

இந்த பாடத்தில், நாம் ஏன் பழைய ஏற்பாட்டை படிக்க வேண்டும் என்ற கேள்வியை கேட்டோம். நமக்கும் இந்தப் பழங்கால புத்தகத்திற்கும் இடையே உள்ள தூரத்தின் காரணமாக நாம் எதிர்கொள்ளும் சிரமங்களையும் அந்த தூரத்திற்கான காரணங்கள் மற்றும் நாம் சந்திக்கும் தூரத்தின் வகைகளையும் பார்த்தோம். புதிய ஏற்பாட்டில் குறிப்பாக இயேசு மற்றும் பவுலின் போதனைகள் பழைய ஏற்பாடு நாம் வாழ்வுக்கு பொருந்துகிறது என்பதை வலுவாக உறுதிப்படுத்துகின்றன என்பதையும் நாம் பார்த்தோம். பழைய ஏற்பாட்டை நம் வாழ்வில் பயன்படுத்துவதோடு தொடர்புடைய சவால்கள், இணைப்புகள் மற்றும் முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு நாம் பின்பற்ற வேண்டிய பாதைகளின் எல்லைக்கோட்டைக் குறிப்பாக தந்துள்ளோம்.

பெரும்பாலும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் பழைய ஏற்பாட்டைப் பற்றி மிகக் குறைவாகவே தெரிந்துகொள்வதில் திருப்தி அடைகிறார்கள், மேலும் புதிய ஏற்பாட்டைத் தான் தேவனுடைய வார்த்தையாக பார்க்கிறார்கள். புதிய ஏற்பாடு முக்கியம் தான். ஆனால் அதே சமயம், தங்கள் விசுவாசத்தில் வளர நம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்களுக்கு அது மட்டுமே போதுமானதாக இருக்காது. பழைய ஏற்பாடும் அவசியம். பழைய ஏற்பாட்டைப் படிப்பது வேலைப்பாடு நிறைந்த காரியமாகும், ஆனால் அப்படி நாம் செய்கிற அனைத்துக்கும் பழைய ஏற்பாடு தகுதியானதே. பழைய ஏற்பாடு தேவனுடைய வார்த்தையாகும். கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களாக, கிறிஸ்து இந்த வேதவாக்கியங்களுக்கு தன்னை அர்ப்பணித்ததைப் போல நாமும் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். நாம் அவ்வாறு செய்யும்போது, பழைய ஏற்பாடு எல்லா இடங்களிலும், எல்லா காலங்களிலும் பின்பற்றுவதற்கு தேவன் நமக்குக் கொடுத்த ஒரு அற்புதமான பரிசு என்பதைக் கண்டுபிடிப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.